15வது வருடத்தில்
# விளம்பரம்™
VLAMBARAM™
☎ 416-282-8059 416-282-4978

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு
WALK IN DENTAL CLINIC
Dr. Iru Vijayanathan
குடும்ப பல்வைத்தியர்

OPEN 7 DAYS
416-264-3232
3150 Eglinton Ave. E.
Markham & Eglinton சந்திப்புக்கு அருகாமையில்

வீடு விற்க, வாங்க...
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)

HomeLife GTA Realty Inc.
1711 McCowan Rd. Suite #206, Toronto
Direct: 416.315.9397
OFFICE: 416.321.6969
Sales Agents Welcome

நதி 15 பாலம் 10 சமூக முன்னேற்றப் பத்திரிகை மாதமிருமுறை இலவசம் MAY 15, 2005


வெளிப்படைச் சிறுபான்மை
09


மனிதத்தின் மீதி
16


VOCTORIA DAY
MAY 23, 05

# டொலர் தேசம்

கிழக்கு பதிப்பகத்தினர் "டொலர் தேசம்" என்ற நூலை பதிப்பித்துள்ளார்கள். இந்த நூலை பா. ராகவன் எழுதியுள்ளார். முன்னர் குமுதம் ரிப்போட்டரில் தொடரான கட்டுரைகளாக வந்ததன் தொகுப்பே இது.

அமெரிக்க சரித்திரத்தின் குறுக்கு வெட்டு முகம் எனக் கூறலாம். ஆனாலும் செவ்விந்தியரின் வரலாறு மறைக்கப்பட்டுள்ளது. ஒரு வரலாற்றை வாசிக்கும் கஷ்ரங்கள் இல்லாமல் சுவாரசியமாக எழுதப்பட்டுள்ளது.

அந்த நூலில் இருந்து சில பகுதிகள்.

1. 1494 - அலெக்ஸாண்டர் என்பவர் போப்பாண்டவராக இருந்தார். அவர் ஒரு காரியம் செய்தார். உலக வரைபடத்தை விரித்து வைத்துக்கொண்டு அதன் குறுக்கு வெட்டாக (அதாவது வடக்கு தெற்காக) கண்ணை மூடிக் கொண்டு ஒரு கோடு போட்டார். தீர்ந்தது விஷயம். போட்ட கோட்டிற்கு கிழக்குப்பகுதி முழுக்க போர்த்துக்கீசர்களுக்கும் மேற்பகுதி முழுக்க ஸ்பெயினுக்கும் சொந்தம் (எப்படி இருக்கிறது கதை).

2. பதினெட்டாம் நூற்றாண்டு அமெரிக்க அடிமைகளின் வாழ்க்கை குறித்து ஆராய்சியாளர்கள் எல்லோரும் அநேகமாக ஒரு விஷயத்தை மட்டும் யோசிக்காமல் ஒப்புக் கொள்கிறார்கள். சராசரியாக ஒவ்வொரு அடிமையும் வாரத்துக்கு 85 முதல் 130 மணி நேரம் வேலை பார்த்திருக்கிறார்கள் என்பதே அது. அதாவது ஒரு நாளைக்கு 4 மணி நேரத்துக்கு கொஞ்சம் கூடுதலான நேரம் மட்டுமே அவர்களுக்கு ஓய்வு.

3. அடிமைகளை வைத்து சூதாட்டுவது, அடிமைகளை அடமானம் வைப்பது, தனக்குச் சேரவேண்டிய தண்டனைகளை அடிமைகளுக்கு வழங்கச் செய்வது திருமணச்சீர்களை ஒன்றாக (சீதனமாக) அடிமைகளை வழங்குவது போன்ற நடைமுறைகள் இருக்கின்றன.

4. ஒரு அடிமையின் விலை $27 டொலர். கொம்போ (Combo) - ஒரு ஆண், ஒரு பெண் பிள்ளைகள் - $40. இது 17ஆம் நூற்றாண்டில். 18ஆம் நூற்றாண்டில் - அதிகபட்சவிலை $1750, குறைந்த விலை $250.

தொடர்ச்சி 02ம் பக்கம்

# கண்டி மாநாடு பொதுக்கட்டமைப்பு



பொதுக்கட்டமைப்பு பூரண வடிவம் பெற உதவி வழங்கும் நாடுகளும் புலிகளும் சிறிலங்கா அரசும் மிகவும் ஆவலாக உள்ளன. இதற்கான பெரும்பங்கு சிறிலங்கா ஜனாதிபதியிடமே உள்ளது. பொதுக்கட்டமைப்பு தொடர்பாக இன்னும் பல சந்தேகங்களும் அச்சங்களும் இருந்து வருகின்றன. இதற்கிடையில் சிறிலங்காவிற்கான உதவி வழங்கும் மாநாடு எதிர்வரும் திங்கட்கிழமை கண்டியில் நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வேளையில் ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அக்காசி அவர்கள் ஊடகவியலாளர் சந்திப்பின்போது பொதுக்கட்டமைப்பு இல்லையேல் மாற்றுத்தீர்வு ஏற்படும் எனத் தெரிவித்துள்ளார். ஜப்பானியத் தூதுவரின் இவ் அறிவிப்பு பொதுக்கட்டமைப்பு ஒன்று ஏற்படுவதில் சந்தேகங்கள் இருப்பதை வெளிப்படுத்துகின்றது.

அண்மைக்காலத்தில் சிறிலங்கா ஜனாதிபதியின் பேச்சுக்கள் சற்று மாறி இருந்தபோதும் இதுவும் அவரின் ஒருவித சந்தர்ப்ப வியூகமாக இருக்கலாம் என கருதப்படுகிறது. உண்மையில் பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்துவதில் இதய சுத்தியுடன் செயல்படுபவராக இருந்தால் அரசுடன் சேர்ந்திருக்கும் கட்சிகளின் நெருக்கடிகளை ஒருபுறம் வைத்துவிட்டு எதிர்க்கட்சியுடன் சேர்ந்து இதனை நிறைவேற்ற முற்பட்டிருக்கலாம் அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பொதுக்கட்டமைப்புக்கு ஒப்பமிட விடுதலை புலிகள் தயாராக உள்ளதாகவும் அரசாங்கத்திற்குள்ளேதான் இழுபறிகள் தொடர்வதாகவும் விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சுப. தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார். இத்துடன் பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்படாவிடின் மாற்று ஏற்பாடு தொடர்பாக புலிகளின் தலைமைப்பீடம் தீவிரமாக பரிசீலிக்கும் என்றும அவர் தெரிவித்துள்ளார். நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் ஐ தமிழ்செல்வன் சந்தித்த பின்னரெ இவ்வாறு தெரிவித்தார். அண்மையில் இந்தியாவும் இக்கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்ததும் சிறிலங்கா அரசு கட்டமைப்பில் ஒப்பமிடுவதில் உள்ள ஐயப்பாடு தெரிகின்றது. எது எப்படி இருந்தாலும் சுனாமியால் பாதிக்கப்பட்ட வடகிழக்குத் தமிழ் மக்களுக்கு உதவிகள் வழங்கவென உதவிவழங்கும் வெளிநாடுகள் ஆர்வம் காட்டுகின்றன.


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
ஆலயம் திறந்திருக்கும் நேரங்கள்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்
காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm, மாலை 5pm - 9pm
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்.
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 - 754 - 7338 / 416 -724 -7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarboro.

Singapore Communication
Since 1991
$40/350 min + Unlimited incoming local calling
$50/500 min + Unlimited incoming local calling
$75/750 min + Unlimited incoming local calling
**Option E & W calling , Free phone $20, $30 Packages also available
For More Info Please Visit to the Store
*** Offer Ends Without Notice***
More Info. Call: 416-740-5292
5010 Steeles Ave. W., Unit 17 ABC-(Kipling & Steeles)

துரித பணமாற்றுச் சேவை
வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
416.267.8221

"Making Dreams Reality"

HomeLife GTA Realty Inc.
Ravi R. Raveendran BSc.(Eng)
Sales Representative
416•817•8479
Bus: 416•321•6969
1711 McCowan Rd., Suite #206, Scarborough, ON. M1S 3Y3
INDEPENDENTLY OWNED AND OPERATED, BROKER


Insurance & Financial Services
Balan Kanapathi (Agent)
• Auto • Home • R.R.S.P • Life
• Disability • Mutual Fund • Group Insurance • Child Education
• Travel & Business

416.321.1515 •905.294.2429
4433 Sheppard Ave. E. Suite 200, (Brimley/Sheppard)

வீடு வாங்க, விற்க...
ரவி பரமு
வீட்டுப் பிரதிநிதி
DIRECT: 416.262.4176
OFFICE: 416.321.6969

HomeLife GTA Realty Inc.
1711 McCowan Rd. Suite #206, Toronto

# உங்கள் வியாபார வெற்றிக்கு இணையத்தளம் தேவையா?

### பகுதி - 02

உங்கள் இணையதளம் கண்ணுக்குப் படக் கூடியதாக உள்ளதா? உங்கள் இணையதள முகவரியை (URL) உங்கள் விளம்பரங்களில் மறக்காமல் சேர்க்கவும். உங்கள் கடிதங்கள் மின்அஞ்சல் என்று எல்லாவற்றிலும் உங்கள் இணையதள முகவரியை அறிமுகப்படுத்துங்கள். உங்கள் வியாபார தன் அறிமுக அட்டை (Business Card) லும் இணையதள முகவரி இருக்க வேண்டும்.

உங்கள் இணையதளத்துக்கு ஒருமுறை வந்தவரைத் திரும்பதிரும்ப வரவழைக்க வேண்டும். இது உங்கள் வியாபாரத்தை வளர்க்க உதவும் ஒரு வழிமுறை. அதற்கு என்ன செய்யலாம்? உங்கள் இணைய தளத்திற்கு வருபவர்களின் மின்அஞ்சல் முகவரியை சேகரிக்க வேண்டும். அந்த மின்அஞ்சல் முகவரியில் அவர்களுக்கு விருப்பமான, உபயோகமான தகவல்களை அவ்வப்போது கொடுக்கலாம். சிறப்பு தள்ளுபடி அறிவித்துள்ளீர்களா? விரைவில் எல்லோருக்கும் தெரிவிக்க செலவற்ற மின்அஞ்சல் முறையைப் பயன்படுத்துங்கள். விசேடமான பொருள்களை விற்பனை செய்கிறீர்களா? சம்பந்தப்பட்டவர்களை இந்தச் செய்தி சென்றடைய மின்அஞ்சலைப் பயன்படுத்துங்கள். உங்கள் இணையதளம் நல்ல பயன்தரும் செய்திகளைக் கொண்டிருந்தால் வாடிக்கையாளர் அந்தச் செய்திகளைத் தெரிந்து கொள்ள அவ்வப்போது உங்கள் இணைய தளத்துக்கு வரலாம். அவ்வாறு வருபவர்களிடம் அவர்களுக்கு விருப்பமான செய்தியைத் தர மின்அஞ்சல் முகவரியை உங்களுக்குத் தெரிவிக்கலாம். உதாரணத்துக்கு ஓர் அடமான முகவர் அவ்வப்போதை வட்டி நிலவரங்களை மின்அஞ்சல் முறையில் எல்லோருக்கும் தெரிவிக்கிறார். அதுபோல உங்கள் தொழிலுக்கு ஏற்ற வாடிக்கையாளருக்குப் பயன்தரும் விடயங்களைப் பெறப்பலரும் மின்அஞ்சல் முகவரியை தர முன்வருவார்கள். பயன்படுத்திக் கொள்ளுங்கள். நீங்கள் மின்அஞ்சலில் (அல்லது வழக்கமான அஞ்சல்) அனுப்பும்போது, அதைப் பெறுபவர், தான் ஒரு சிறப்பானவர் என்று கருதும் வகையில் உங்கள் கடிதத்தை அமைத்திருக்க வேண்டும். ஏதோ எல்லோருக்கும் அனுப்பும் வாடிக்கைக் கடிதம் அல்லது சுற்றறிக்கை (Circular) என்றால், உங்கள் அஞ்சல் குப்பைக் கூடைக்குத்தான் போய்ச் சேரும். நேரமும், முயற்சியும் வீண்.

**செய்யும் தொழிலில் வெற்றி பெற**

உங்கள் இணையதளத்துக்கு எத்தகையவர் வருகை தருகின்றனர்? அவர்களால் உங்களுக்கு வியாபாரம் வருகின்றதா என்று கண்காணியுங்கள். இணைய தளம் ஒரு சமூக சேவை அல்ல, அது உங்கள் வியாபாரத்தைப் பெருக்க வேண்டும். சற்றே கற்பனை கலந்த வித்தியாசமான ஆக்கமும், தகவல் தாக்கமும் உங்கள் இணைய தளத்தை ஊக்கமுறச் செய்யும் தேவைப் பட்டால் மற்றவர்களின் உதவியை நாடுங்கள். உங்கள் இணையதளத்தில் உங்களின் வெற்றிக் கதைகளைப் போடுங்கள். திருப்தியடைந்த வாடிக்கையாளர்கள் சொல்வதைத் தெரிவியுங்கள், முடிந்தால் அந்த வாடிக்கையாளரின் புகைப்படத்தையும் அனுமதி பெற்று இணையதளத்தில் போடுங்கள். இந்த அணுகு முறை புதிய வாடிக்கையாளர்களை பெற பெரிதும் உதவும்.

**பெரி. முத்துராமன்**

உங்கள் இணையதளத்துக்கு வருகை தருவோர்களிடம், அவர்களைப் போன்றே, அவர்கள் நண்பர்களும், உறவினர்களும் பயன் அடைய, அத்தகையோரின் மின்அஞ்சல் முகவரியைக் கோரலாம். அவ்வாறு தருபவர்களுக்கு எந்த விதத்தில் நீங்கள் சற்றே வித்தியாசமாக உதவமுடியும்? சிந்தியுங்கள்.

இணையதளம் ஓர் அலங்காரப்பொருள் அல்ல, வியாபாரத்தைப் பெருக்க உதவும் நல்ல சாதனம். உங்கள் வியாபாரம் சிறிதோ, பெரிதோ உங்களுக்கு என்று ஓர் இணையதளம் உள்ளதா?



(வளரும்)

# டொலர் தேசம் (DOLLAR NATION)

### 01ஆம் பக்கத் தொடர்ச்சி

5. அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி மேடிசன் ஒரு முடிவு செய்தார். பிரிட்டன் படைகளை கனடா எல்லையில் சந்திப்பது. ஏனென்றால் Detroit லும் Niagara நதிக்கரை ஓரத்திலும் இன்னும் ஒரிரு இடங்களிலும் நிகழ்ந்த போரில் அமெரிக்காவுக்கு அத்தனை சிலாவாக்கியான வெற்றி கிடைத்திருக்கவில்லை. நிறைய உதை சாப்பிட வேண்டியிருந்தது. ஆகவே சற்றும் எதிர்பாராத விதத்தில் குடா மண்ணில் போரைத் தொடங்கினால் பிரிட்டன் நிலைகுலைந்து போகும் என்று நினைத்தார் மேடிசன்.

அப்படித்தான் நடந்தது. York நகரில் (இன்றைய ரொறொன்ரோ) நடந்த கடும் யுத்தத்தில் பிரிட்டன் படு தோல்வியைச் சந்தித்தது. நகரைக் கைப்பற்றிய அமெரிக்க படைகள் மது வனத்துக்குள் நுழைந்த வானரப்படைகள் போல் ஒரு ஆட்டம் ஆடியது. எங்கு பார்த்தாலும் தீ எல்லாக் கட்டிடங்களும் தரைமட்டம். ஒரு சாலையும் உருப்படியாகக் கிடையாது. தண்ணீர் விநியோகம் வெட்டப்பட்டது. போக்குவரத்து அறவே துண்டாடப்பட்டது. (குரங்கின் கையில் பூமாலை)

இதற்கு பழிதீர்ப்பது மாதிரி 1814 ஆம் ஆண்டு இதே காரியத்தை பிரிட்டிஷ் படைகள் அமெரிக்கத் தலைநகரில் நடத்தியது. வாஷிங்டன் DC நகர் முழுவதும் தரைமட்டம் (Well Done Canada) (Canada won the world hockey cup)

6. சட்டசபை அங்கத்தினராக ஒரு வழியாக தேர்வாகியிருந்தவரை சபாநாயகர் பதவிக்கு கட்சி நிறுத்த, படு தோல்வியடைந்தார். அமெரிக்க காங்கிரசில் நொமினேஷன் மறுக்கப்பட்டது. செனட்டர் பதவியில் தோற்றார். அமெரிக்க துணை ஜனாதிபதி தேர்தலில் தோற்றார். மறுபடியும் செனட்டர் தேர்தலில் தோல்வி. 1809 வருஷம் அந்த மனிதர் பிறந்ததிலிருந்து தோல்வியைத் தவிர வேறு எதையுமே பார்த்ததில்லை என்றால் நம்பத்தான் வேண்டும். ஆனால் சற்றும் மனம் தளராத இவர் 1860 வருஷம் ஜனாதிபதியாக தேர்தலில் போட்டியிட்டார். சரித்திரம் காணாத வெற்றி. யார் இவர்? ஆபிரகாம் லிங்கன்.

7. இவர் ஜனாதிபதி ஆனதும் முதல் செய்தது அடிமை ஒழிப்புச் சட்டத்தை அமுலுக்கு கொண்டு வந்தமை இதனை எதிர்த்து சில மாநிலங்கள் Confederate states of America என்ற தனி நாட்டை அறிவித்தன. இதில் West Carolina, Maryland, Kentucky, Missouri, Denver ஆகிய மாநிலங்கள் அடங்கும். 1865 இல் உள்நாட்டு யுத்தம் முடிவுற்ற பின்னர் இந்த மாநிலங்கள் மீண்டும் அமெரிக்காவுடன் இணைந்தன.

8. Kentucky மாகாணத்தின் Lousville நகரில் உள்ள கறுப்பின மாணவர்களுக்கான பள்ளி ஒன்றில் நடைபெற்ற உரையாடல் இது.

ஆசிரியர்: குழந்தைகளே! வெள்ளைக்காரர்களின் முடி மிகவும் நீளமாக வளருவதாலும், அவர்களது சருமம் வெள்ளை வெளேரென்று இருப்பதாலும் அவர்கள் உங்களை விட உயர்ந்தவர்கள் என நீங்கள் நினைக்கின்றீர்களா?

மாணவன்: இல்லை சார்

ஆசிரியர்: நல்லது அவர்கள் உயர்ந்தவர்கள் இல்லை. ஆனால் வித்தியாசமானவர்கள். அவர்களிடம் அதிகாரம் உள்ளது. இந்த அரசாங்கத்தை அவர்கள் தான் அமைத்துள்ளார்கள். இப்போது சொல்லுங்கள் உங்களுக்கும் அவர்களுக்கும் என்ன வித்தியாசம்?

மாணவன்: பணம்

ஆசிரியர்: சரி தான், ஆனால் எப்படி அவர்களிடம் மட்டும் பணம் இருக்கிறது? எங்கிருந்து சம்பாதித்தார்கள்?

மாணவன்: நம்மிடமிருந்து பெற்றார்கள்? நம்மிடமிருந்தே திருடிக் கொண்டார்கள்.

*இன்றுவரைக்கு நிறப்பிரச்சினைக்கு சிறந்த உதாரணமாக சரித்திர ஆசிரியர்கள் இதனைக் கருத்திற்கொள்ளுவர்.*

9. April 09, 1865 இல் Virgina விட் உள்ள ஒரு சிறுகிராமத்தில் Appomattox Court house என்ற இடத்தில் General Lee ன் படைகள் சரணடைந்ததுடன் உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்தது. சரியாக 5 நாட்களின் பின்னர் ஏப்ரல் 14, 1865 லிங்கன் ஒரு நாயகம் பார்த்துக் கொண்டிருக்கையில் இரவு பத்துமணி 15 நிமிடங்கள் John Vilkis Booth என்ற நாடக நடிகன் (அந்த நாடகத்தின் நடிகனல்ல) லிங்கனின் Box த் திறந்து லிங்கனை சுட்டான். மறுநாள் காலை 7.22 மணிக்கு லிங்கன் இறந்தார்.

10. ரூஸ்வெல்ட் - வரையறுக்கப்பட்ட முதலாளித்துவத்தை முன்னிறுத்தினார். அதாவது யாரும் எந்தத்துறையிலும் புதிய வர்த்தகம் தொடங்கலாம். புதிய முதலாளிகளை இன்னும் மிரட்டி, எளிய தொழிலாளர் சட்டங்களை அமுல்படுத்தி, அதன்மூலம் தொழிலாளர்களை கொஞ்சம் சந்தோஷப்பட வைத.துடு இன்னும் நேர்மையுடன் உழைப்பை தொடர வைப்பது அச்சமே.

11. யுத்தம் தந்த இலாபங்கள். முதலாம் உலக யுத்தத்தின் முதல் மூன்று வருடங்கள் அமெரிக்கா போரில் பங்கு பற்றவில்லை. ஆனால் ஐரோப்பாவிற்கு தேவையாக பொருட்களை ஏற்றுமதி செய்தது. எங்கு எது குறைந்தாலும் அங்கு அமெரிக்கா பொருட்களை அனுப்பியது. உணவுப் பொருட்கள், ஆயுதங்கள், மருந்து வெடிபொருட்கள், ஆயுதங்கள், ஆடைகள் பழச்சாறு, பெற்றோல், இரும்பு, பதப்படுத்திய இறைச்சி போன்றன. (Do not pay now, pay after few years with inter-



est) தற்போது “Brick” இன் Policy யை 1917 இல் அமெரிக்கா கடைபிடித்தது.

12. Business is the main Business of Americans என்றார் முன்னாள் அமெரிக்க அதிபர் கால்வின் கூலிட்க்.

13. Linda Brown vs Board of Education case - அமெரிக்க சரித்திரத்தில் இடம் பெற்றுவிட்ட முக்கியமான வழக்கு.

கறுப்பினச் சிறுமி லிண்டாவை வெள்ளையர் பள்ளியில் சேர்க்க மறுத்தமைக்காக லிண்டாவின் தந்தை வழக்கு போட்டார். ஆனால் தீர்ப்பு பள்ளி நிர்வாகம் செய்தது சரி எனக் கூறியது. ஆனாலும் இதனை எதிர்த்து சுப்ரீம் கோட்டிற்கு சென்ற போது சுப்ரீம் கோட் லிண்டாவிற்கு சார்பாக தீர்ப்பளித்தது.

இதேபோல் Alaba மாகாணத்தில் Rosabox என்ற கறுப்பினப் பெண், பேரூந்தில் வெள்ளை இனத்தவருக்கு எழுந்து இடத்தை கொடுக்க மறுத்தமைக்காக பேரூந்தில் இருந்து இறக்கப்பட்டார். விளைவு சுமார் 380 நாட்கள் பேரூந்தில் எந்த கறுப்பினத்தவரும் ஏறாமல் போராடினர். இதனால் தொழிற்சாலைகளில்

தொடர்ச்சி 03ம் பக்கம்

விளம்பரம்
VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்க்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.

**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram, P.O. Box 37527, 31 Tapscott Road, Toronto, ON M1B 5P9, Canada
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com

HOME INSPECTION
• வீடு தரமானது என உறுதிப்படுத்திக் கொள்ள... • வீடு பராமரிப்பு பற்றி விளக்கமாகத் தெரிந்து கொள்ள...
ந. தயாபரன்
Certified Inspection Specialist
Expert Building Inspections LTD.
• Exceed the Standards • Industry Canada Registered • Professionals Serving the GTA • On site Report
24 /7 - Toll Free - 1.866.373.3315 416.727.8336

# சிசுவின் இதயம், கண்கள்

## நீண்டகாலம் உயிர் வாழ்வதற்கான இரகசியங்கள் - 9

சிசுவின் இதயம், கண்கள் உருவாக்கத்துக்கு இது அவசியமாகும்.

பண்டைக்கால எகிப்தில் ஒரு வழக்கம் இருந்து வந்தது. இரவு நேரங்களில் கண்பார்வை குறைந்து போனவர்களுக்கு அவர்கள் ஈரலை சாப்பிடக் கொடுத்து வந்தார்கள். தொடர்ந்து ஈரலை சாப்பிடும் போது கண்பார்வை மறுபடியும் சரியாகிவிடும். பின்னர் கண்டறியப்பட்டது, ஈரலில் அதிகளவான உயிர்சத்து A உள்ளது என்று இது Retinol என்றும் அழைக்கப்படும்.

**செழியன்**

மூன்றாம் உலக நாடுகளில் குறைந்த பட்சம் மூன்று மில்லியன் குழந்தைகளின் கண்ணில் உள்ள Cornea பாதிப்படைந்து Xeropthalmia குறைபாடு ஏற்படுகின்றது. அத்தோடு இரண்டரை இலட்சம் தொடக்கம் ஐந்து இலட்சம் குழந்தைகள் கண்பார்வையை இழக்கின்றனர் என்பது இன்னோர் கொடுமையான விடயம். இந்தக் குழந்தைகள் ஏன் கண்பார்வையை இழக்கின்றனர் என்பது பெரும்பாலும் பெற்றோருக்குத் தெரியாது. உயிர்சத்து A குறைபாடு ஏற்படுவதினாலேயே இவ்விளைவுகள் ஏற்படுகின்றன. இரவு நேரங்களில் கண்பார்வை குறைதல் உயிர்சத்து A குறைபாட்டினை எச்சரிக்கை செய்யும் சமிக்கையாகும்.

Retina என்பது நமது கண்களின் பின்பக்கத்தில் உள்ளது. நாம் பார்க்கும் போது ஒளி கண்களுக்குள் ஊடுறுவி, இறுதியில் Retina வை அடைகிறது. அங்கிருந்து மூளைக்கு கடத்தப்பட்டு "காட்சி" உணரப்படுகின்றது. குறைபாட்டினால் Retina பாதிப்படைந்து கண்பார்வையில் கோளாறு ஏற்படுகின்றது.

கர்ப்பப்பையில் இருக்கின்ற போதிருந்தே சிசுவுக்கு மிக அவசியமான உயிர்ச்சத்துகளில் ஒன்றே உயிர்சத்து A ஆகும்.

சிசுவின் வளர்ச்சிக்கு Retinol (உயிர்சத்து A) மற்றும் Retinoic acid (RA) என்பன மிக அத்தியாவசியமாகும். சிசு வளர்கின்ற போது கை, கால் வளர்ச்சிக்கும் மற்றும் இதயம், கண்கள், காதுகளின் உருவாக்கத்துக்கும் இது அவசியமாகும்.

**மூன்றாம் உலக நாடுகளில் குறைந்த பட்சம் மூன்று மில்லியன் குழந்தைகளின் கண்ணில் உள்ள Cornea பாதிப்படைந்து Xeropthalmia குறைபாடு ஏற்படுகின்றது. அத்தோடு இரண்டரை இலட்சம் தொடக்கம் ஐந்து இலட்சம் குழந்தைகள் கண்பார்வையை இழக்கின்றனர்.**

எமது உடலில் உயிர்சத்து A க்கு இன்னும் பல தொழிற்பாடுகள் உள்ளன. நமது கலங்கள் ஒழுங்காக பிரிவடைந்து, பின்னர் வளர்வதற்கு, தோலின் பாதுகாப்புக்கு, ஆரோக்கியமான தலைமயிருக்கு, உடலின் நோய் எதிர்ப்புச் சக்திக்கு, இனவிருத்திக்கு என்று பல விடயங்களும் உயிர்சத்து A இல்லை என்றால் பாதிப்படைகின்றது.



உயிர்சத்து A, anti-infective உந்து சக்தி என்றும் அழைக்கப்படுகின்றது. எமது நோய் எதிர்ப்புத் தன்மை (Immune System) செயல்பட இது அவசியம் என்பதால் இவ்வாறு அழைக்கப்படுகின்றது. வெண்குருதிச் சிறுதுணிக்கைகளின் செயற்பாட்டை அதிகரிப்பதுடன், antibodies செயல்பாட்டையும் உயிர்சத்து A அதிகரிக்கச் செய்கின்றது.

உயிர்சத்து A குறைபாடு உள்ள குழந்தைகளுக்கு, சுவாசப்பையில் அடிக்கடி தொற்று ஏற்படுவதும் பரவலாக அவதானிக்கப்பட்டுள்ளது. இதே சமயம் நீரழிவு நோய் உள்ளவர்களின் குருதியில் உள்ள இனிப்புச் சத்தின் அளவை கட்டுப்படுத்தவும் உயிர்சத்து A அவசியம் என்று கருதப்படுகின்றது.

மீன் எண்ணெய், ஈரல், கரட், மாம்பழம், கீரை, பப்பாப்பழம், பால், முட்டை என்பவற்றில் உயிர்சத்து A உள்ளது. உணவு தயாரிப்பு முறைகள், சமையல், சேமித்து வைக்கும் போதும் பெரும்பாலும் உயிர்சத்து A இழக்கப்படுகின்றது என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும்.

அளவுக்கு அதிகமான உயிர்சத்து A, உடலில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும். எனவே மேலதிக உயிர்சத்து A எடுப்பதை கண்டிப்பாக தவிர்த்துக் கொள்ளவேண்டும். குறிப்பாக கர்ப்பம் தரித்த பெண்கள் உயிர்சத்து A மாத்திரைகளை மருத்துவரின் ஆலோசனை இல்லாமல் எடுக்கவே கூடாது.

---

# டொலர் தேசம்

02ஆம் பக்கத் தொடர்ச்சி

வேலைகள் பாதிக்கப்பட்டன.

14. ஏராளமான புத்தபிக்குகள் அமெரிக்கப் படையையும், தெற்கு வியட்நாம் அரசையும் எதிர்த்து தீக்குளிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் இடதுசாரிகளின் கை மிகவும் ஓங்கியது.

15. ஹோசி மீன் போரைக் கூட தனியொரு தளபதியாக தானே திட்டம் வகுக்காமல், திறமை மிக்க இராணுவ வீரர்களைக் கொண்ட ஓர் ஆலோசனை குழுவை அமைத்து அவர்கள் ஒட்டுமொத்தமாக எடுத்த முடிவுகளை மட்டுமே செயல்படுத்துவார். 'தனி மனிதர்கள் அகங்காரம் கொள்வதற்கு ஒரு நியாயமும் இல்லை. ஒரு தேசத்தின் சுதந்திரப் போராட்டம் என்பது அதன் சொந்தக்காலில் தான் நிற்க வேண்டும்" என்பது ஹோவின் கருத்து.

16. கௌதமாலாவில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிபர் ஜேக்கப் அர்பென்ஸ். இவர் ஓர் இடது சாரி. இவர் ஆட்சிக்கு வந்ததும் "உழுபவனுக்கு நிலம் சொந்தம்" என்ற சட்டத்தை அமுலுக்கு கொண்டு வந்தார். விளைவு United fruits என்ற அமெரிக்க நிறுவனம் சுமார் 2,34,000 ஏக்கர் நிலத்தில் உற்பத்தி செய்தது. இச் சட்டத்தின் வருகையால் United Fruits நிறுவனத்திற்கு தான் ஆட்சி செய்த நிலத்தை இழக்கும் அபாயம் ஏற்பட்டது. அமெரிக்க உளவுப்படை புரட்சி ஒன்றை செய்த மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜேக்கப் அர்பென்ஸ் இன் ஆட்சியை கவிழ்த்தது. அமெரிக்க நிறுவனம் ஒன்றின் விலை = ஒரு நாட்டின் ஆட்சிக் கவிழ்ப்பு.

**- பதமி -**

17. அமெரிக்க உளவுப்படை கியூபாவிலிருந்து கௌதமாலாவுக்கு குடிபெயர்ந்த Castro விரோத இளைஞர்களை (1400 பேர்) தேடிபிடித்து பயிற்சி அளித்தார்கள். ஏப்ரல் 17, 1961 நாலு அமெரிக்க விமானங்கள் அமெரிக்கப் பைலட்டுக் களுடன் கியூபா சென்றனர். விஷயம் பரம ரகசியமாக இருந்த போதும் வெளியே தெரிந்த போது, கென்னடி மறுத்துவிட்டார். "கியூபாவில் என்ன நடக்கப் போகிறது என்று எனக்குத் தெரியாது" என அடித்துக் கூறினார். புரட்சி வெற்றியடையும் என கென்னடி நம்பினார். ஆனால் 1400 பேரில் ஒருத்தர் கூட தப்பவில்லை. நாலு அமெரிக்க விமானிகளும் சுட்டு வீழ்த்தப் பட்டனர். இதில் அமெரிக்கர்கள் எவரும் பங்கு பற்றவில்லை என அமெரிக்கா அடித்துக் கூறிய தால் இன்றுவரை நாலு விமானிகளும் காணாமல் போனவர்கள் பட்டியலில் உள்ளார்கள்.

18. Operation Phoenix என்ற வியட்நாம் தாக்குதல் இடதுசாரி போராளிகளுக்கு எதிராக நடத்தப்பட்டது என்றது அமெரிக்க அரசு. இதில் இறந்த 20,000 பேரில் வெறும் ஒரு சிலரே இடதுசாரிகள் என்கிறது Foreign Affairs என்ற அமெரிக்க பத்திரிகை.

இவை சில பகுதிகள். பா. ராகவன் ஏற்கனவே "பாக். ஒரு புதிரின் சரிதம்" என்ற நூலையும் எழுதியுள்ளார். டொலர் தேசம் என்ற புத்தகத்தில் பல இடங்களில் ஒரு பக்க சார்புக் கருத்துகள் இருந்த பொழுதிலும் நிச்சயமாக வரவேற்கப்பட வேண்டிய நூல். இதனை Midland & Ellesmers சந்திக்கருகாமையில் உள்ள முருகன் புத்தகசாலை, காலம் செல்வம் 905 - 475-3887, மற்றும் கிழக்கு பதிப்பகம் (இந்தியா) பெற்றுக்கொள்ளலாம்.




S M I L E

• BUSINESS PLANS
• CORPORATE TAX PREPARATION OF FILING
• PROFESSIONAL OVER 15 YEARS EXPERIENCE
• ACCOUNTING, TAXATION
• SYSTEMS - POINT OF SALES

RK CONSULTANTS

PL. CALL: 905.887.7457 / 905.751.7537

24 hrs, 365 days

தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர்

ரவி நடராஜா

• வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றிய தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும், உரிய இழப்பீடுகள், மற்றைய இழப்பீடுகள், விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள் மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள் Accident & Traffic Ticket

(14 Years Insurance Claims Experience)

416-245-6555 2095 Weston Road, Suite 203, Toronto, ON

416-755-2801 2390 Eglinton Ave., E. Suite 223, Scarborough, ON



APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்பு திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN

Accredited Test & Repair Facility

• Detailing
• Motor Shampoo
• Interior Shampoo
• Exterior Wash
• Waxing

• Repairs
• Safety Certification
• Overall Maintenance
• Under Coating
• Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL



# வெளிப்படைச் சிறுபான்மை



கனடாவுக்கு 2017ஆம் ஆண்டு 150 வயதாகப்போகின்றது. அப்பொழுது அதன் குடித்தொகையில் ஐந்தில் ஒரு பங்கினர் வெளிப்படையாகத் தெரியும் சிறுபான்மையினராக (visible minority) இருப்பர்.

கடந்த நூற்றூண்டுத் தொடக்கத்தில் கனடாவின் மேற்குப் பகுதியில் ஐரோப்பியர் குடியேறினர். அதற்குப் பின் பிற நாட்டவர்களின் வருகையும் படிப்படியாகத் தொடர்ந்தது. எனினும் 2017ல் உலகின் வெவ்வேறு நாடுகளிற் பிறந்தவர்களின் தொகை மிகக் கூடுதலாக இருக்கப்போகின்றது.

இப்படிக் கூறுகின்றது கனடாவின் புள்ளிவிவரத் திணைக்களம் (Statistics Canada). இத் திணைக்களத்தினர் கனடாவின் குடித்தொகை தொடர்பாக மேற்கொண்ட ஆய்வின் முடிவு கடந்த மார்ச் மாதம் 22ஆம் திகதி வெளியிடப்பட்டது. அதில் வெளிப்படைச் சிறுபான்மையினர்பற்றிக் காணப்படும் மேலுஞ் சில தகவல்கள் பின்வருமாறு:

- கனடாவின் குடித்தொகை இயற்கையான மகப்பேற்றாலன்றி, குடிவரவாளர் களாலேயே அதிகரித்து வருகின்றது.
- ஆண்டுதோறும் சராசரியாக 225,000 புதியோர் கனடாவிற் குடியேறி வருகின்றனர்.
- இவர்களிற் பெரும்பான்மையானவர் ஆசிய நாடுகளைச் சேர்ந்தவர்.
- 2017ஆம் ஆண்டளவில் இவர்களிற் பெருந்தொகையினர் - ஏறத்தாழ 75 % த்தினர் - ரொறன்ரோ, வான்கூவர், மொன்றியல் அகிய முப்பெரும் நகரங்களில் வாழ்வர்.
- அவ்வாண்டுப் பகுதியில் பெரும்பாக ரொறன்ரோவின் குடித்தொகையில் அரைவாசிக்கு மேற்பட்டவர் ஐரோப்பியரல்லாதவர்களாக இருப்பர்.
- அவர்களில் தென் ஆசியாவைச் சேர்ந்தவர்களே பெருந்தொகையான வெளிப் படைச் சிறுபான்மையினராக விளங்குவர். இவர்களின் தொகை 6.6 மில்லியனாக இருக்கும். 2001ல் தென் ஆசியாவைச் சேர்ந்தவர் ரொறன்ரோவில் 488,000 ஆகவே இருந்தனர்.
- அடுத்துப் பெரிய வெளிப்படைச் சிறு பான்மையினராகச் சீனர் இருப்பர். இவர்களின் தொகை 735,000 அளவில் இருக்கும். 2001ல் ரொறன்ரோவில் இவர்களின் தொகை 420,000 ஆக இருந்தது.
- கனடாவுக்கு வரும் புதிய வெளிப் படைச் சிறுபான்மையினரில் 45% த்தினர் ரொறன்ரோவிலும் 18%த்தினர் வான்கூவரிலும் 11%த்தினர் மொன்றியலிலும் வாழ்வர்.
- 2017ஆம் ஆண்டளவில் ஒன்ராறியோவில் 4.1 மில்லியன் வெளிப்படைச் சிறுபான்மையினர் வாழ்வர். இத்தொகை நாட்டின் மொத்த வெளிப்படைச் சிறுபான்மையினரில் 47% ஆக இருக்கும்.

இப் புதியவர்களை ஒன்ராறியோ எப்படிச் சமாளிக்கப்போகின்றது என்ற கேள்வி இப்பொழுதே எழுந்துவிட்டது.

கடந்த ஆண்டு கனடாவிற் குடியேறிய புதியோரில் 57 சதவீதத்தினரை ஒன்ராறியோ மாகாணம் ஏற்றுக்கொண்டது. அவர்களைக் குடியமர்த்தும் சேவைகளுக்கு ஒட்டாவா $109 மில்லியனைக் கொடுத்தது. கணக்குப் பார்த்தால் தலைக்கு $800 முடிகிறது.

ஆனால், அதே காலத்தில் 16 சதவீதப் புதியவர்களை மட்டும் ஏற்றுக்கொண்ட குவிபெக் மாகாணத்துக்கு ஒட்டாவா $145 மில்லியனை வழங்கியிருக்கிறது. அதாவது ஆளுக்கு $3,800.

இவ்வித முறையற்ற பங்கீடுகளைப் பேசித் தீர்க்கவேண்டும் என்கிறார் ஒன்ராறியோவின் குடிவரவுக்குப் பொறுப்பான அமைச்சர்.



**கவிஞர் வி. கந்தவனம்**

# முகிலைக் கிழித்த மின்னல் சிவராம் !



முகிலைக் கிழித்து அகிலங் காண
முழக்கத்தை முன்னதாகவே
அறிவித்துவந்த மின்னலே!
ஊடகத் துறை அண்ணலே!
சிவராமே! சிந்தனைச் செம்மலே!
செந்தமிழ் பெற்ற தவராமே! தராக்கியே!
மின்னாமல் முழங்காமல்
பறித்துவிட்டாரா உன்னுயிரை இராக்கதர்?
சதியைக் கண்டு நாணியிருக்குமே சுனாமி?
இதுவா புத்தம் சரணம் கச்சாமி?

முன்னர் நிமல் பின்னர் நடேசன்
இப்பொழுது நீயா?
எப்பொழுது இதற்குச் சாவு மணி?
நீதி தேவனே!
நீயுமா அநீதிக்குக் கூட்டணி?

உள்ளதை எழுதுவதற்கு யார் இனி?
எங்கள் நிலைப்பாட்டை
எவ்விதம் அறியும் தாரணி?

எதிலுமே விடுதலை நோக்கு!
எவருக்குமே அஞ்சாத போக்கு!
தகவலில் தலையாய நேர்மை!
எழுத்திலே இணையற்ற கூர்மை!
தவறுகளுக்கு எரியம்பு எய்தாய்!
சரித்திரத்தைச் சரியாகப் பதிவு செய்தாய்!

எதிரிகள் -
இன்னமும் இருட்டிலேதான் கிடக்கிறார்கள் -
படு கொலைகளால் கொடியவர்கள்
தங்கள் பதவிகளைத் தக்கவைக்க
மனப் பாலைக் குடிக்கிறார்கள்!

பொறுமையைச் சீண்டுகிறார்கள்!
போரினைத் தொடங்கத் தூண்டுகிறார்கள்!
தலைவரின் சாணக்கியத்தை
இத்தனை ஆண்டுகளாகியும்
புரிந்து கொள்ளாத பேடிகள்!
உலகத்துக்குத் தெரியாதா
இவர்களின் கேடுகள்?

வெட்ட வெட்டத் தழைக்கும் இனம்
ஊடக இனம்!
கட்டி மரணப் பெட்டியில் மூடி
வெட்டிக் குழியில் புதைத்தாலும்
உண்மை ஒருநாள் தலைகாட்டும்!
தருமத்தைத் தவறாது நிலைநாட்டும்!

திண்மை சான்ற சிவராமே!
உன்பாதையில் முட்கள் வளரா!
உன் ஊடக விற்கள் தளரா!
எம் கழுத்துக்கு ஆரம் உன் எழுத்து வீரம்!

மாமனிதரே!
எமது சோகம் உனக்கு மாலையிடுவதாக!
உனது தாகம் சாந்தியடைவதாக!

வாழ்க! வணக்கம்!

**கவிஞர் கந்தவனம்**

# பசித்திருந்தால் பலம் !

உலகப் பழக்கம் இயல்பாய் மூன்று வேளையும் வயறு நிறைய சாப்பிடுவது அல்லாமல் மாலையிலும் சிற்றுண்டி இடையிடையே சில நொறுக்கு தின்பண்டங்கள், இது தவிர உபசரிப்பால் கிடைக்கும் சுவையான பதார்த்தங்களையும் வேளை காலம் நேரம் பார்க்காமல் அளவும் பார்க்காமல் கிடைத்ததை எல்லாம் தின்றுவிடுவது என்பது சிறியவர் முதல் முதியவர் வரை இயல்பான பழக்கமாகி விட்ட ஒரு வாழ்க்கை நிலைமையே நடைமுறையில் இருந்து வருகிறது.



இப்பழக்கம் முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டியது. பசிக்காமலேயே மணியைப் பார்த்து கடனே என்று கடமையைச் செய்ய வேண்டுமே என்ற கட்டாயத்துக்காக உண்பது ஒரு தேவையில்லாத செயல். 'பசித்துப்புசி' என்பதே ஔவை வாக்கு. பசித்திருப்பதால் (சில மணிநேரம்) சோர்வு, களைப்பு, பலவீனம் வந்துவிடாது. அப்படியே ஏற்பட்டாலும் அது பழக்கப்படுத்தப்பட்ட தற்காலிகமான உணர்வே. இதற்குபோய் பயமோ, கவலையோ கொள்ளத்தேவையில்லை. ஆரோக்கியமான மனிதன் பசியை பொருட் படுத்தமாட்டான். சிலவேளை உணவைக் கூட தவிர்த்திருக்க முடியும். உடலுக்கு ஒன்றும் ஆகிவிடாது. எப்போதுமே நன்கு பசித்தபின் உண்பது நன்மையைப் பயக்கும்.

மேலும் ஆரோக்கிய வாழ்வை விரும்புவோர் அனைவரும் அரைவயிறு உணவு, கால்வயிறு தண்ணீர், கால்வயிறு வெற்றிடம் இருக்குமாறு சாப்பிடுவதே மிகவும் நன்மைதரும். ஏனென்றால் உறுப்புக்கள் அசைத்து ஜீரணிப்பதற்காகவும், மூச்சு விடுவதற்கும் வசதியாய் உடல் இருக்கும். அப்படியல்லாமல் தலையணைக்குள் பஞ்சு அடைப்பதுபோல் வயிறு நிறைய உணவை உட்கொண்டால் உடனே அசதியும் தூக்கமும் வரும். மூளையும் சரியாய் வேலை செய்யாது. உங்களுக்கு ஏதாவது பொறுப்பான அவசரவேலை இருந்தால் (பசி வராததை உணர்ந்திருப்பீர்கள்) செய்யும் வேலையை முடித்துவிட்டே உணவை எடுத்துக் கொள்ளுங்கள். செய்யும் வேலையும் சிறப்பாய் அமையும். வேலைக்குப் பின் உண்ட உணவும் பூர்ணமாய் ஜீரணித்து தன்மயமாகி உடலோடு சக்தியாய் மாறும். மனிதன் வாழ்க்கையில் சராசரி 60 வயது வாழ்பவர்கள் தனது வாழ்க்கையில் 30 ஆயிரம் கிலோ எடை உணவை தின்று தீர்த்து விடுகிறார்கள். நாட்டில் பட்டினி சாவைவிட, தன் உழைப்பிற்கு மீறி அதிகமாக தின்று நோய் வந்து இறந்தவர்களே அதிகம். பட்டினியினால் மரணம் உடனே நிகழ்ந்து விடாது. நல்ல உடல் ஆரோக்கியம் உள்ள மனிதன் சுத்தமான தண்ணீரை மட்டும் குடித்துக் கொண்டே மாதக் கணக்கில் சாதாரணமாய் உயிர் வாழ்ந்திருக்க முடியும். (உடலில் சேமிப்பு பகுதியான கொழுப்புக்கள் காலியானபின் தான் மரணம் சம்பவிக்க முடியும்) திட உணவு வகைகள் கட்டாயமாக வேண்டுமென்பதில்லை.







## WEB CREATION

**அதிக செலவில்லாமல் சிறப்பான இணைய தளத்தை உங்கள் வியாபாரத்துக்கு என அமைக்க வேண்டுமா? இலவச ஆலோசனை பெற இன்றே, இப்போதே அழையுங்கள்** M. Karthik

தொலைபேசி எண் - 647 519 0623



அனுபவமும், திறமையும், பொறுமையும் இணைகிற போது உயர்ந்த இலக்குகள் இலகுவாக சாத்தியமாகும்



HomeLife Higher Standards

HomeLife GTA Realty Inc. Realtor
1711 McCowan Raod, Suite 206
Toronto, Ontario M1S 3Y3
T. 416.321.6969 F. 416.321.6963

**Nel Ketha** B.Sc. (Ag)
Sales Representative

**416.677.4707**
knellinathan@trebnet.com



RAFFLE CLASS AND HIGHLY PROFESSIONAL

# போவோமா ஊர்கோலம்

பெற்ற தாயையும், பிறந்த பொன்னாட்டையும் தரிசித்து பத்து வருடங்களாகி விட்டன. காலச்சுழற்சியினால் நாட்கள் மின்னி மறைந்து விட்டன. கண்முன்னே வாழும் தெய்வம் பெற்ற தாயை காணும் ஆசையை இன்னும் காலம் கடத்த முடியாது. மன்னிப்பும் கிடையாது. சிறை மீண்ட செம்மல் என்றாவது பெயர் எடுத்து கடந்து போன காலங்களுக்காக மனச்சாட்சிக்கும், உறவுகளுக்கும் காரணம் காட்டவும் முடியாது. இன்னும் காலம் தாழ்த்தாது அம்மாவையும் பார்த்து அவரது விருப்பத்தையும் பூர்த்தி செய்து விடுவது தான் ஒரே வழி. என்ன பத்து வருடங்களா? உமது தாய்பாசமும், தாய் நாட்டுப் பற்றும் நன்றாகவே விளங்குகின்றது என்று சிலர் முகம் சுளிப்பதும் புரிகின்றது. என்ன செய்வது கனடிய வாழ்க்கையின் தார்ப்பரியம் அப்படி. பெற்றதாயும், பிறந்த மண்ணில் இருக்க முடியாமல் வேறு நாடு போனதால் தொலைபேசியிலேயே வாழ்க்கை ஓடிவிட்டது.

## சாதாரண மனிதனின் பார்வையிலிருந்து

பத்து வருடங்களுக்கு முன் இறைவனடி சேர்ந்து விட்ட அப்பாவின் ஜீவன் முத்திக்காக இராமேஸ்வரம் சென்று கிரியைகள் செய்ய வேண்டு மென்பதே அம்மாவின் ஆசை. தமிழ் நாட்டைக் கூட தமிழ் திரைப்படங்களில் வெளிநாட்டுக் காட்சிகளுடன் கலந்து பார்த்ததில், தமிழ் நாடு எது, வெளிநாடு எது என்று ஐயப்பாடு தோன்றி விட்ட நிலையில், ஒரு கல்லில் இரண்டு மாங்காய்கள் அடித்த கதையாக தாய்நாட்டையும் தமிழ்நாட்டையும் ஒரே தடவையில் பார்க்கும் நல்ல ஒரு சந்தர்ப்பத்தையும் தவறவிட்டு விடக்கூடாது, அதே வேளை வீட்டையே மூடி நிற்கும் பனி மலைகளிடம் இருந்தும், எலும்பை உறையவைக்கும் குளிரில் இருந்தும் சில நாட்களுக்காவது தப்பிவிடலாம் என்ற நப்பாசையும் விரட்ட அலுவல்கள், சென்ற தை மாதத்தில் தடல்புடலானது! முதலில் இந்தியா விசா எடுக்க வேணும். கடவுச்சீட்டு காலாவதியாவதற்கு இன்னும் ஒரு வருடம் இருப்பதாக திகதிகள் பறை சாற்றியதில் சிறிது மன ஆறுதல். அடுத்து இந்திய விசா, 1993ஆம் ஆண்டு கடைசி தடவையாக இந்தியா சென்ற போது விசா (Visa) எடுத்தது ஞாபகம் இருந்தது. ஒரு பனி படர்ந்த தை நாளில் வெப்பநிலை பூச்சியத்துக்கு கீழே 25 சதம அளவாக (-25°c) உணரப்பட்டு கொண்டிருந்த வேளையில் இந்தக் குளிரில் புறப்பட வேண்டுமா என மனதில் கேள்வி எழுந்தும், பத்து வருட இடைவெளியை நிரப்புவதற்கு சரியான வழி அம்மாவின் ஆசையை நிறைவேற்றுவதே என்று உள்மனம் கூறியதால், கேட்டுக் கேள்வி இல்லாமல் Yonge & Bloor சென்று India High Commission இருந்த கட்டிடத்திற்குள் புகுந்தேன். அங்கு இந்தியாவைக் காணவில்லை. முன்பு விசாவிற்கு (Visa) சென்ற போது நின்ற மக்கள் கூட்டம், திரை அரங்குகளில் சினிமா பார்க்க இந்தியாவில் நின்றது போன்ற உணர்வினை கொடுத்ததால் இந்தியாவிற்கே சென்று விட்டது போல இருந்தது. அன்று அப்படித் தெரியவில்லை. வாசலில் இருந்த பாதுகாவலரிடம் விசாரித்ததில், இந்தியா இடம் மாறி கிட்டத்தட்ட ஐந்து வருடங்களாகி விட்டது என்ற உண்மையை சொன்னார். எங்கு சென்றது என்று கேட்டால் 1835 Yonge St. என்றும் Devis will subway விற்கும் அருகாமையில் இருப்பதாகவும் விலாசத்தை கொடுத்தார். என் போன்ற பலர் இந்தக் குளிரிலும் அசிரத்தையாக அங்கு சென்று விசாரிப்பார்கள் போலும். அதனால் விலாசத்தையே தயாராக வைத்திருந்தார். இனி பழையபடி குளிருக்குள் இறங்கி இடம் தேட வேண்டும் என்று எண்ணியபடி வெளியே வரும் போது முதலில் விசாரித்து விட்டு வராத எனது மடமைத்தனத்தை வெறுக்க வேண்டியதாகி விட்டது.

Devis will subway station இல் இறங்கி இந்தக் குளிருக்குள் Bus பிடிப்பதா? Taxi எடுப்பதா? நடைபவனியா என்று பல கேள்விகள். வெளியில் வந்தால் திக்கு வடக்கு புரியவில்லை. வெளிநாட்டில் முதல் நாள் போன்ற பிரமை, குளிர் ஒரு பக்கம் வாட்டியது. அருகில் இருந்த கடையில் விசாரித்தால் அதோ அந்த பக்கம் என்று அவரது கை காட்டிய திசையில் நடக்க தொடங்கி மூக்கு நுனி விறைக்கவும் கட்டிடத்திற்குள் கால் வைக்கவும் சரியாக இருந்தது. இடத்தை தேடி பிடித்து உள்ளே சென்றால் அங்கு வழமை போல் திருவிழாக் கூட்டம். சரி, சேவை இலக்கத்தை பெறலாம் என்றால் அன்றைய சேவைக்கான எண்ணிக்கை முடிந்து விட்டது என்று பணிப்பெண் ஒரு மாதிரியாக பார்த்து கடிகாரத்தை சுட்டிக் காட்டினாள். பத்துமணிக்கு பிறகு இலக்கம் கொடுபடமாட்டாதாம். அவரிடம் எனது நிலமையை (Bloor & Younge சென்று வந்தது) விளக்கியதும் பாவத்துக்கு இரங்கி பிச்சை போடுவது போல துண்டை கையில் போட்டார். இந்தியாவில் நாம் எதிர்பார்க்க வேண்டிய வாழ்க்கை முறைக்கு எம்மை தயார் படுத்திக் கொள்ள சரியான ஆரம்பம்.

கொடுத்த விண்ணப் படிவங்களை பூர்த்தி செய்த பின்பு கிடைத்த ஒரு கதிரையில் அமர்ந்து அங்கு இருப்பவர்களை நோட்டம் விட்ட வண்ணம் எண்ணங்களை வந்திருப்பவர்களின் வாழ்க்கையும் எப்படியானதோ, இன்பமானதோ, துன்பமானதோ எதற்காக விசா (Visa) எடுக்க வைத்திருப்பார்கள் என்றெல்லாம் கேள்வி மேல் கேள்விகளாக மனதிற்குள் எண்ணிய வண்ணம் அழைப்புக்காக காத்திருந்தேன். சிலமணி நேரங்களின் பின் தலையில் பொறி ஒன்று திடீரென தட்டியது. இதென்ன பக்கத்தில் இருப்பவர்களின் விண்ணப்பபடிவங்களுடன் கடவுச்சீட்டுக்கு பாவிக்கும் அளவில் புகைப்படங்கள் வைத்திருக்கிறார்கள். ஒருவேளை விசாவிற்கும் (Visa ) தேவையோ? விறுவிறுரென்று விண்ணப்பபடிவத்தை திரும்பவும் வாசித்தால், வாழ்க்கையே வெறுத்தது. எனது சந்தேகத்தை உறுதி செய்தது. ஏனெனில் என்னிடம் புகைப்படங்கள் இல்லை. அது பற்றியும் தெரிந்து கொள்ள நான் கரிசனை எடுத்திருக்கவில்லை. நேரத்தையும், சேவை இலக்கத்தையும் பார்த்தால் நேரம் மதியம் ஒருமணி என்று கைக்கடிகாரம் காட்டியது. எனது அழைப்பிற்கு இன்னும் முப்பத்தியெட்டு இலக்கங்கள் இருக்கின்றன. என்ன செய்யலாம்? புகைப்படம் இல்லாமல் விசா எடுக்க முடியாது என்பது உறுதி. படத்திற்கு எங்கே போவது? புகைப்படம் எடுக்கும் வேகம் ஒருபுறம், கோபம் ஒரு புறமாக மண்டபத்தை விட்டு, வெளியே இறங்கி கால்போன திசையில், புகைப்படங்கள் எடுக்கும் இடங்கள் இருக்கின்றதா என்று தேடிய வண்ணம் ஓட்டமும் நடையுமாக Younge & Eglinton வரை சென்று புகைப்படத்தை எடுத்துக் கொண்டு திரும்பவும் விசா மண்டபத்திற்குள் காலை வைக்கவும் மண்டபம் சிறிது சிறிதாக கண்ணை விட்டு மறையவும் சரியாக இருந்தது. ஒன்றுமே புரியவில்லை. கடும் குளிரில் அவ்வளவு தூரம் போய் வந்ததும் மூக்குக் கண்ணாடி குளிரில் உறைந்து பனிக்கட்டியாகும் நிலைக்கு வந்திருந்த நிலையில் மண்டபத்திற்குள் இருந்த சூடேற்றும் காற்று குளரில் உறைந்த மூக்குக் கண்ணாடியில் படிந்ததே மண்டபம் மறையக் காரணம் என்று உணர்ந்து கொண்டேன். குளிரின் கொடூரம் கண்களை மறைத்தது. மூக்குக் கண்ணாடியைத் துடைத்த வண்ணம் விசா மண்டபத்திற்கு வரவும் இன்னும் ஐந்துபேர் எனக்கு முன் இருப்பதாக சேவை இலக்கம் காட்டியது. மனதிற்கு ஆறுதலாக இருந்தபோதும், எனது மூடத்தனத்தின் மேல் சொல்ல முடியாத கோபம்.




ஒரு படியாக சேவை ஜன்னலுக்கு சென்று எனது கனடிய கடவுச்சீட்டையும், அவர்கள் கேட்ட பணம் அறுபத்திரண்டு டொலரையும், விண்ணப்பபடிவத்தை புகைப்படங்களுடன் சேர்த்து கொடுத்த பின்பு விசா கிடைப்பதற்கு கிட்டத்தட்ட மூன்று கிழமைகள் காத்திருக்க வேண்டும் என்று கூறப்பட்டது. காரணம் கனடிய பிரஜையாக இருந்தபோதும் இலங்கையில் பிறந்திருந்ததால், அவர்கள் ஐம்பது வருடங்கள் கனடாவில் வாழ்ந்திருந்தாலும் கூட அது தான் முடிவு. மற்றைய நாட்டவர்களை போல அன்றைய தினமே கடவுச்சீட்டினை விசாவுடன் திரும்பப்பெற்றுக் கொள்ள முடியாது. இலங்கையில் பிறந்தவர்களின் விண்ணப்பப் படிவங்களில் கூறி இருப்பது போல கோவிலை தரிசிக்கவா? அல்லது மாலைகள் போடவா போகிறார்கள் என்று உறுதிப்படுத்தித்தான் நுழைவுச்சீட்டை கொடுப்பார்கள் போலும் என்று மனதிற்குள் எண்ணிக்கொண்டேன். இங்கு பிறந்திருந்தாலும் கூட பிள்ளைகள் கூட விண்ணப்பப்படிவங்களில் கையெழுத்து இட்டுத்தான் விசா எடுப்பதற்கு உறுதி செய்யவேண்டும். விசாவிற்கு அத்தனை கெடிபிடி.

விடுமுறைக்காக வைத்திருக்கும் பதினைந்து நாட்களில் ஒரு நாளை விசா எடுப்பதற்காக பாவித்தால் மிகுதியாக இருப்பது பதின்நான்கு நாட்கள் மட்டுமே. ஒரு நாள் விடுமுறை இந்திய விசாவிற்கும், பொறுமையை கற்று கொள்வதற்கும் பயன்படும்.

*பயணம் தொடரும்...*

*பரம்ஜி*

*ஒரு சாதாரண மனிதன்*




**உங்கள் பிள்ளைச் செல்வங்களுக்கு எமது தாய் மண்ணுடன் ஒரு தொடர்பினை ஏற்படுத்த அல்லது உங்கள் ஓய்வு காலத்தை அங்கு இன்பமாகக் களித்திட இலங்கை இந்தியா போன்ற நாடுகளில் வீடு நிலங்களில் முதலிட எண்ணுகிறீர்களா?**

**நம்பிக்கையுடன் தொடர்பு கொள்ளுங்கள்**

*பரம்ஜி* - **416.230.1107**

**PARAM. G GNANASWARAN**
Sales Representative

HOMELIFE
HIGHER STANDARDS

**HOME LIFE GTA REALTY INC.**
1711 McCowan Rd., Suite 206, Scarborough, ON

**416.321.6969**
**905.670.9969**
(Mississauga)
paramg@themathuram.com



தமிழன் வழிகாட்டி
வழங்கும்
செந்தியின்
வர்த்தகச் சோலை

**MAY 14 & 15, 2005**
Saturday & Sunday 11am to 10pm
**Parc Downsview Park**
(Sheppard & Keele)

sgs Films Ltd. Presents



நான் யார்...
எண்ணமும் ஆக்கமும்
SG.சேகர்

வர்த்தகச்சோலையில்
நான் யார் DVD
பெற்றுக்கொள்ளலாம்...

நான் ஒரு வழக்கறிஞர் இல்லை
**கலகலப்பு தீசன் 416-803-5296**

# கிரிக்கெட் செய்திகள்

## ICC - TEST தரவரிசை

ரெஸ்ட் கிரிக்கெட்டிற்கான தரவரிசை Ranking பட்டியலை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் ICC வெளியிட்டுள்ளது. (மே 10-2005)

மேற்கிந்தியதீவுகளுக்கு எதிரான ஆன்டிகுவா வில் சமீபத்தில் நடைபெற்ற ரெஸ்ட் போட்டி, தென்ஆபிரிக்க ஆல் ரவுண்டர் (all rounder) ஜாக்ஸ் காலிசுக்கு முக்கியத்துவத்தை ஏற்படுத்தியுள்ளது. அந்த ஆட்டத்தில் அபாரமாக ஆடியதன் மூலம் சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ள தர வரிசைப் பட்டியலில் காலிஸ் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

அத்துடன் தென்ஆபிரிக்க அணித்தலைவர் கிரேம் ஸ்மித்தும் முதல் 10 இடங்களுக்குள் முன்னேறியுள்ளார். அவர் 752 புள்ளிகளைச் சேர்த்து 10-வது இடத்துக்கு உயர்ந்துள்ளார்.

அதே சமயம் இந்தியாவின் நட்சத்திர துடுப்பாட்டக்காரன் சச்சின் டெண்டுல்கர் ஓர் இடம் பின்னடைவு கண்டு, 12-வது இடத்துக்கு இறங்கியுள்ளார்.

செயின்ட்ஜான்ஸில் நடைபெற்ற போட்டியில் 300 ஓட்டங்களைக் குவித்த கிறிஸ்கெயில் 24-வது இடத்துக்கு முன்னேறியுள்ளார். இதுவே அவருக்கு சிறப்பான முன்னேற்றமாக அமைந்துள்ளது.

காலிஸ், பிரையன் லாரா, ராகுல் திராவிட், ரிக்கி பாண்டிங் ஆகியோர் முதல் 4 இடங்களைப் பிடித்துள்ளனர். 23 புள்ளிகளே அவர்களை வேறுபடுத்தியுள்ளது. இந்தியாவின் வீரேந்திர சேவாக் 5-வது இடத்தைப் பிடித்துள்ளார்.

**மெக்ராத் முதலிடம்** - பந்துவீச்சு தரவரிசையில் அவுஸ்திரேலியாவின் கிளென் மெக்ராத் முதலிடத்தைத் தக்கவைத்துக் கொண்டுள்ளார். அதே சமயம் 7 ஆண்டுகளுக்குப் பிறகு முதல்முறையாக 800 புள்ளிகளுக்கு கீழே தென்ஆபிரிக்க வேகப்பந்துவீச்சாளர் வீரர் ஷான் போலக் இறங்கியுள்ளார். அவர் 787 புள்ளிகளுடன் 3-வது இடத்தில் உள்ளார்.

மகாயா நிதினி, ஆந்த்ரே நெல் ஆகியோர் போலக்கை விஞ்சும் காலம் வெகு தூரத்தில் இல்லை. இருவருமே குறைந்த புள்ளி வித்தியாசத்தில் அவரை நெருங்கியுள்ளனர்.

துடுப்பாட்ட தரவரிசை - (அடைப்புக்குறியில் வீரர்கள் சேர்த்துள்ள புள்ளிகள்)

1. ஜாக்ஸ் காலிஸ், தென் ஆபிரிக்கா (886)
2. பிரையன் லாரா, மே.இ.தீவுகள் (875)
3. ராகுல் திராவிட், இந்தியா (872)
4. ரிக்கிபாண்டிங், அவுஸ்திரேலியா (863)
5. வீரேந்திர சேவாக், இந்தியா (848)
6. டேமியன் மார்டின், அவுஸ்திரேலியா (836)
7. ஆதம் கில்கிறிஸ்ட் அவுஸ்திரேலியா (819)
8. இன்சமாம் உல்-ஹக் பாகிஸ்தான் (794)
9. யூனிஸ் கான் பாகிஸ்தான் (757)
10. கிரேம் ஸ்மித் தென் ஆபிரிக்கா (752)

Bowling தரவரிசை -

1. கிளென் மெக்ராத் அவுஸ்திரேலியா (897)
2. முரளீதரன், இலங்கை (834)
3. ஷான் போலக் தென்ஆபிரிக்கா (787)
4. ஷோயப் அக்தர் பாகிஸ்தான் (786)
5. மகாயா நிதினி தென்ஆபிரிக்கா (784)
6. ஷேன் வார்னே அவுஸ்திரேலியா (771)
7. அனில்கும்ளே இந்தியா (766)
8. ஆந்த்ரே நெல் தென்ஆபிரிக்கா (751)
9. ஜேசன் கில்லெஸ்பி அவுஸ்திரேலியா (739)
10. ஸ்டீவ் ஹார்மிசன் இங்கிலாந்து (717)




## ரெனிஸ் - காதலர்கள்!

அவுஸ்திரேலிய ரெனிஸ் வீரர் லேடன் ஹுவிட்டை தெரிகிறதோ இல்லையோ, பெல்ஜியம் வீராங்கனை கிளைஸ்டர்லின் காதலர் என்றால் ரசிகர்கள் ஓரளவு அறிந்து கொள்ள முடியும். அந்த அளவுக்கு அவர்களது காதல், விளையாட்டு உலகில் பிரபலமாக இருந்தது. ஆனால் கடந்த ஆண்டு அவர்களிடையிலான உறவு திடீரென முறிந்தது. இதையடுத்து அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த 21 வயதாகும் தொலைக்காட்சி நடிகை பெக் கார்ட்ரைட்டுடன் ஹுவிட் நெருக்கமானார். அவர்களது அன்புக்கு அடையாளமாக இந்த ஆண்டு இறுதியில் குழந்தையைப் பெற்றெடுக்க உள்ளார் கார்ரைட். இருவரும் இணைந்தே இந்த அறிவிப்பை வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ளனர். அவர் தற்போது 3 மாத கர்ப்பிணியாக உள்ளார்.

கிளைஸ்டர்ஸை ஹுவிட் பிரிந்தது போல, கார்ட்ரைட்டும் நீண்ட காலமாக காதலித்த நடிகர் பியூ பிராடியைக் கடந்த ஆண்டு பிரிந்தது கூடுதல் செய்தி.
நான்கு ஆண்டுகளாக காதலித்து வந்த கிளைஸ்டர்ஸ் - ஹுவிட் ஜோடி, பிரிவதற்கு முன்பு திருமணம் செய்துகொள்ள நிச்சயித்த மாதம் 2005 யூன்.

## ஷுமாக்கரின் ஆதிக்கம்! கார் பந்தயம்

எழுதாதீர்கள் என 7முறை உலகச் சாம்பியன் மைக்கேல் ஷுமாக்கர் வேண்டுகோள் விடுத்துள்ளார். ஸ்பெயினில் நடைபெற்ற 2005 சீசனின் 5-வது ஃபார்முலா -1 பந்தயத்தில், காரில் ஏற்பட்ட கோளாறு காரணமாக பாதியிலேயே வெளியேறினார் ஷீமாக்கர்.

இதையடுத்து, இனிமேல் அவரால் முதலிடத்தை எட்டிப்பிடிக்க முடியாது என்பதை உணர்த்தும் விதமாக, "ஷுமாக்கரின் ஃபார்முலா -1 கார் பந்தய ஆதிக்கம் முடிவுக்கு வந்தது" என பத்திரிகைகளில் செய்திகள் வெளியாயின.

'எனது ஆதிக்கம் முடிவுக்கு வந்துவிட்டது என எழுதியவர்களுக்கு எனது திறமையைப் பற்றித் தெரியாது. 2005 சீசன் (பந்தயங்கள்) அதிக பந்தயங்களைக் கொண்டது. இன்னும் நடைபெறவேண்டியவை அதிகம் உள்ளன. மாற்றங்கள் நிகழவும் அதிக வாய்ப்புள்ளன. என்றாலும் முதலிடத்தை எட்டுவதற்கு கடுமையான போராட்டத்தை நிகழ்த்த வேண்டும். ஆனால் எல்லாம் முடிந்துவிட வில்லை. முதலிடத்தை எட்டுவதற்கேற்ற முயற்சிகளை செய்துவருகிறேன்' என கூறியுள்ளார் 36 வயதாகும் ஷுமாக்கர்.

**எஸ். கணேஷ்**

2005 சீசன் மொத்தம் 19 பந்தயங்களைக் கொண்டது. இதுவரை நடைபெற்ற 5 பந்தயங்களின் முடிவில் ஸ்பெயின் வீரர் ஃபெர்னாண்டோ அலான்சோ 44 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார். ஷுமாக்கர் 10 புள்ளிகளுடன் உள்ளார்.

கடந்த சீசனில் நடைபெற்ற 18 பந்தயங்களில் ஷுமாக்கரின் ஃபெராரி குழு 15 -ல் வெற்றி கண்டது. அதில் ஷுமாக்கர் மட்டும் 13 பந்தயங்களில் வாகை சூடினார்.

## நாலாவது ரெஸ்டில் எட்டுப்பேர் சதம்! தென்ஆபிரிக்கா அணியின் 11பேரும் பந்துவீசினர்!

தென்ஆபிரிக்காவுக்கு எதிராக செயின்ட் ஜான்ஸில் நடைபெற்ற நாலாவது கிரிக்கெட் ரெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் வீரர் கிறிஸ் கெயில் 317 ஓட்டங்களை குவித்து சாதனை படைத்துள்ளார். அத்துடன் இரண்டு அணியிலும் சேர்ந்து எட்டுபேர் ஓர் இனிங்ஸில் சதம் அடித்து ஒரு வரலாற்று சாதனையாகவும் அமைந்துள்ளது. நாலாம் நாள் ஆட்ட முடிவில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 5 விக்கெட்டுக்கு 565 ஓட்டங்களைக் குவித்துள்ளது. சந்தர்பால் 82 ஓட்டங்களுடனும் பிராவோ 10 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் ஆடினர்.

தென்ஆபிரிக்கா 6 விக்கெட்டுக்கு 588 ஓட்டங்களைக் குவித்து முதல் இன்னிங்ஸை "டிக்ளேர்" செய்தது. மேற்கிந்தியதீவுகள் 747 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுகளையும் இழந்து நாலாவது ரெஸ்ட் போட்டி வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்துள்ளது. ஏற்கனவே இத்தொடரை தென்ஆபிரிக்கா 2-0 என வென்றுள்ளது நினைவு கூறத்தக்கது.

## கெயில் சாதனை

184 ஓட்டங்களுடன் நான்காம் நாளில் ஆட்டத்தைத் தொடர்ந்த கிறிஸ் கெயில், 317 ஓட்டங்களைச் சேர்த்து தேநீர் இடைவேளைக்குப் பின்னர் ஆட்டமிழந்தார்.

வேகப்பந்துவீச்சாளர் ஜோன்டெகி வீசிய பந்தை 'தேர்டு மேன்' திசையில் விளாசியபோது, தலைக்கு மேலே சென்ற பந்தைப் பிடித்து அவரை அணித்தலைவர் ஸ்மித் வெளியேற்றினார்.

கெயிலின் எண்ணிக்கையில் 34 பவுண்டரி, 3 சிக்ஸர்கள் அடங்கும். அவர் மொத்தம் 483 பந்துகளை எதிர்கொண்டார். இது கை தொடக்க வீரரான கெயில், தேநீர் இடைவேளைக்கு சற்று முன்னதாக 300-வது ஓட்டத்தை எட்டினார். அவர் குவித்த 317 ஓட்டங்களே தென்ஆபிரிக்காவுக்கு எதிராக ஒருவர் அடிக்கும் அதிகபட்ச ஓட்டங்களாகும். அவருக்கு முன்னதாக, 1031, 32 இல் அடிலெய்டில் அவுஸ்திரேலியா ஜாம்பவான் டொனால்டு பிராட்மான் 299 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழக்காமல் இருந்துள்ளார்.

## நாலாவது வீரர்

அத்துடன் அதிகபட்ச ஓட்டங்களைக் குவித்த மேற்கிந்திய தீவுகள் வீரர்கள் வரிசையில் நாலாவது இடத்தைப் கெயில் பிடித்துள்ளார். ரெஸ்ட் வரலாற்றில் ஒரே இன்னிங்ஸில் அதிக ஓட்டங்களைக் குவித்தவர்கள் வரிசையில் 14-வது இடத்தைப் பெற்றுள்ளார்.

அத்துடன், ஒரே இன்னிங்ஸில் 3சதங்களை அடித்துள்ள மேற்கிந்தியத்தீவுகள் வீரர்கள் வரிசையில் நாலாவது இடத்தைப் பெற்றுள்ளார். சோபர்ஸ், லாரன்ஸ் ரோவே, பிரையன் லாரா ஆகியோர். இவருக்கு முன்னதான 'மும்'மூர்த்திகள்.

2002 ஆம் ஆண்டு கிரெனடாவில் நியூஸிலாந்துக்கு எதிராக 204 ஓட்டங்களைச் சேர்த்ததே இதற்கு முன்புவரை கெயிலின் அதிகபட்சமாக இருந்தது.

## சார்வான் சதம்

சார்வான் 127 ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டமிழந்தார். சார்வான், கெயில் ஜோடி நாலாவது விக்கெட்டுக்கு 331 ஓட்டங்களைக் குவித்தது. தென்ஆபிரிக்காவுக்கு எதிராக அனைத்து விக்கெட்டு களுக்கு எதிராகவும் இது சாதனையாக அமைந்துள்ளது.




ELECTRICAL WORKS



FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளிற்கு: 416-286-2880

**வீட்டில் பூச்சி, எலித் தொல்லையா?**

வீடுகள், தொடர்மாடி வீடுகள், தொழிற்சாலைகள், வியாபார நிலையங்கள் போன்றவற்றில் பூச்சி, எலித் தொல்லையா? கவலையை விடுங்கள். முற்றாக ஒழிக்க அழையுங்கள்

Kanthan: 416.291.3997







• No Spraying • No Smelling • No Moving

MORTGAGE CENTRAL

For All kinds of Mortgage

தனிநபர், வாசஸ்தலம், அலுவலகம், வியாபாரம் முதலியவற்றிற்கு அடமான வசதிகள் ஒழுங்கு செய்யப்படும். அடமானம் அல்லது கடன் வசதிகள் ஒழுங்கு முற்றாகும்வரை முற்பணம் செலுத்தத் தேவையில்லை.

No up front fee
1st & 2nd & 3rd Mortgage
Up to 100% Financing

Call: Sam Chaba
Cell: 416-318-5626
Res.: 905.201.0767

No Advance Taken Until Mortgage /Loan Approved
Lots of private Funds Available
• Business Loans / line of Credit • Personal Loan / Line of Credit

# வளமானவர்கள் வாழும் மத்திய ரொறொன்ரோ

## நாமும் நமது இல்லமும்

### ராஜா மகேந்திரன்




மே 01, 2005 ஆம் திகதி வெளிவந்த "விளம்பரம்" பத்திரிகையில் ரொறொன்ரோவில் வீட்டின் விலை 65% அளவில் அதிகரித்திருந்தைப் பற்றி பார்ந்திருந்தோம். அதாவது Toronto Real Estate Board இன் பகுதியில் வீட்டின் சராசரி விலை $330,000 ஆக இருந்தது. ஏப்ரல், 2005 இல் வீட்டின் சராசரி விலை மேலும் அதிகரித்துள்ளது. சராசரி விலை $342,032.00 ஆகக் காணப்படுகின்றது. வீட்டின் விலை தொடர்ந்து அதிகரித்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. உதாரணமாக மே 09, 2005 இன் கணக்கின்படி வீட்டின் சராசரி விலை $346,001 ஆகக் அதிகரித்துள்ளது. 2005 ஏப்ரல் இல் விற்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை கடந்த ஆண்டு 2004ஆம் ஆண்டு ஏப்ரலில் விற்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கையிலும் குறைவாகக் காணப்படுகின்றது. 2004ஆம் ஆண்டு ஏப்ரலில் விற்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 9,168 ஆகவும் 2005ஆம் ஆண்டு ஏப்ரலில் விற்கப்பட்ட வீடுகள் 8,834 ஆகவும் காணப்பட்டது. Toronto Real Estate Board இல் உள்ள பகுதிகளிலேயே மத்திய பகுதியாகிய (Central District) இல் விலை அதிகமாகக் காணப்படுகின்றது. சராசரி விலை $455,153 ஆகக் காணப்படுகின்றது. ஆங்கிலத்தில் Central District என அழைக்கப் படும் இப் பகுதி கிழக்கே விக்டோறியாப்பாக் அவெனியுவற்கும் / டொன்வலிப்பாக்கிற்கும் மேற்கே Allan Road / Dufferin Road இற்கும் வடக்கே Steeles Ave ஐயும் தெற்கே Lake Ontario ஐயும் கொண்டு அடக்கப்பட்டுள்ளது. இந்த அளவு 14 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. C1, C2, C3......C15 ஆகும். (C5 என்று ஒரு பகுதி கிடையாது.) இந்தப் 14 பகுதிகளிலேயும் சில பகுதிகள் விலை கூடியதாகவும், சில பகுதிகள் விலை குறைவாகவும் காணப்படுகின்றன. கனடாவில் பெரிய பணக்காரர்களில் பலர் இந்தப்பகுதியில் வாழ்கின்றார்கள். எம்மவரில் பலர் இந்தப் பகுதியை நோக்கி இடப்பெயர்ந்து வருவது நல்ல விடயமே. இப்பகுதியில் பல சிறந்த பாட-சாலைகள், சகல வசதிகள், மற்றும் நகரின் எந்தப்பகுதிக்கும் சென்று வருவதற்கு இலகுவாகக் காணப்படுவதும் யாவருக்கும் தெரிந்த விடயம். ஆதனத்தின் விலை குறையக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டாலும் ஒப்பீட்டு ரீதியில் இப்பகுதியில் பெரிதான இறக்கம் ஏற்படுவதில்லை என்பதனை வாசகர்கள் அறிந்திருப்பது நல்லது.

### 100% அடமானம் பெற்று வீடு வாங்கலாம்

நிதி நிறுவனங்கள் தங்களிடம் இருக்கும் பணத்தை போட்டி போட்டு மக்களிடம் தள்ளிவிடுவதைக் காணக்கூடியதாகக் இருக்கின்றது. இதனால் மக்கள் கடனாளி களாக்கப்படுகின்றார்கள். சில ஆண்டுகளிற்கு முன்பாக ஆதனம் வாங்கும் போது ஆகக் குறைந்தது 10% ஆவது முதலீடு செய்ய வேண்டியிருந்தது. பிற்பாடு இந்த அளவு 5% ஆகக் குறைந்தது. இந்த முதலீட்டின் அளவு 0 ஆகக் குறைந்துள்ளது. அதாவது முதலீடு இல்லாமலேயே வீடு வாங்கக் கூடியதாக உள்ளது.

**(குறிப்பு - அமெரிக்காவில் சில நிறுவனங்கள் வீட்டின் விலையின் 120% வரை கடன் எடுக்கலாம் என்பதும் அறியக்கிடக்கின்றது.)**

பூச்சிய முதலீட்டுடன் வீடு வாங்குவது சரியா? தப்பா? இது அவரவர் நிலைமையைப் பொறுத்தது. நிதி நிறுவனங்களின் வியாக்கியானத்தின்படி "Qualified Buyers" என அழைக்கப்படுபவர்களே இவ்வாறு வாங்கலாம் எனக்கூறுகின்றது. Qualified Buyers என்றால் என்ன? ஒழுங்கான நிரந்தரமாக தொழில் புரிபவர்கள் நல்ல வருமானம் கொண்டவர்கள், நல்ல Credit கொண்டவர்களாகக் காணப்படுபவர்களே. இவர்களின் வருமானம் சிறந்ததாகக் காணப்படும் போதும் இவர்களால் சேமிக்க முடியாமல் திண்டாடுபவர்கள். இவர்களிற்கு உதவுவதற்காகவே பூச்சிய முதலீடு கொண்டு வரப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

எனது அனுபவத்தின்படி, பூச்சியம் முதலீட்டுடன் வீடு வாங்குவது சிறந்ததல்ல. இவ்வாறு அடமானம் எடுப்பவர்களிற்கு வட்டி வீதத்தில் கழிவு கிடையாது. இதனால் மேலதிகக் கொடுப்பனவு கொடுக்கவேண்டி நேரிடும். ஒரு ஆதனத்தை வாங்கும்போது எவ்வளவு விரைவாக எடுத்த கடன்பளுவை கொடுத்து முடிக்கலாம் என்பதே நோக்கமாக இருக்க வேண்டும். இதற்கு எந்தெந்த வழிவகைகள் இருக்கின்றன என்பதனை ஆராய்வதே சிறந்தது. அதனைவிட்டு பூச்சிய முதலீட்டுடன் வீடு வாங்குவதன் நோக்கம் தான் என்ன?

இதனால் மேட்கேஜ் எடுக்கும்போது உங்களது தேவை, வசதி, கொடுப்பனவு செய்யக்கூடிய அளவை ஆராய்ந்து அதற்கேற்ப ஆதனத்தை வாங்குவதே சிறந்தது. அத்துடன் கிழமை, இரண்டு கிழமைக்கு ஒரு தடவை என்ற முறைகளில் கொடுப்பனவு செய்தல் சிறந்தது.

மேலதிகமாக பணம் கிடைக்கும் காலங்களில் கடனுக்கு எதிராக முதலிட வேண்டும். பெறப்பட்ட அடமானத்தை எவ்வளவு விரைவாக கொடுத்து முடிக்க முடியுமோ, அதனை நோக்கமாக வைத்து செயல்படுவதே நல்ல எதிர் காலத்திற்கு வழி சமைக்கும்.






# எம்.ஜி.ஆரின் வெற்றி சினிமா தந்த வெற்றியல்ல

இந்த மட்ட ரக அரசியல், மட்ட ரக சினிமா கலவையிலிருந்த போதிலும் அதிலிருந்து தன்னை உயர்த்திக் கொண்டவர் என்று எம்.ஜி.ஆர் ஒருவரைத் தான் சொல்லமுடியும். அன்றிலிருந்து இன்றுவரை உள்ள ரசிகர் மன்ற சேற்றில் திளைத்து வாழும் வேறு யாரும் விலக்கில்லை. அது பற்றி இங்கு விளக்கமாக, விரிவாக பேசமுடியாது. அது பற்றி விளக்கமாக எம்.ஜி.ஆர் பற்றி நான் வேறிடத்தில் எழுதியிருக்கிறேன். வியப்பூட்டும் ஆளுமைகள் என்று சமீபத்தில் தமிழினி வெளியிட்டுள்ள என் கட்டுரைத் தொகுப்பில் (அக்கட்டுரையை) காணலாம். இப்போதைக்கு அவர் தன் சுய ஆளுமையின் குணத்தால் இங்கு பேசப்படும் மற்றவர்களிலிருந்து வேறுபட்டவர் என்று இங்கு குறிப்பிடுவது போதுமானது. இதன் காரணமாக அவரது சினிமாவோ, அவரது ரசிகர்களோ மட்டரகத்திலிருந்து மாறுபட்ட குணம் கொண்டவர்கள் என்பது பொருளல்ல.

## வெங்கட் சாமிநாதன்

எம்.ஜி.ஆர் தனக்கென ஒரு தனிப்பட்ட பிர-திமையை தன் படங்களில் வளர்த்துக்கொண்டார். அதற்கு அவரது ரசிகர்கள் அடிமைப் பட்டார்கள் என்றே சொல்லவேண்டும். அப்பிரதிமை முற்றிலும் வெற்று வெளியிலிருந்து கற்பனையில் உருவான பிரதிமை அல்ல. எம்.ஜி.ஆர். என்ற தனிமனிதருக்கும் அந்த சினிமா பிரதிமைக்கும் பொதுவான குணங்கள் பல உண்டு. உறவு உண்டு. அவருடைய சினிமா பிரதிமையையே எம்.ஜி.ஆராக அவரது ரசிகர்கள் கண்டார்கள் என்றால் அதற்கு ஒரு நீண்ட பழைய சரித்திரம் உண்டு. அதில் உண்மை உண்டு. இதை நாம் வேறு எந்த நடிகர் விசயத்திலும் அதுவும் சிறப்பாக, தம் ரசிகர் மன்றங்களை தன் தொண்டர் குழாமாக தன் விளம்பரக் கருவியாக பயன்படுத்திக் கொள்ளும் அத்தனை நடிகர்கள் விசயத்திலும் அத்தகைய உறவைக் காண முடியாது. எம்.ஜி.ஆர் தன் ரசிகர்களை தனக்கே விசுவாசமுள்ள கட்சித் தொண்டர்களாகவும், கட்சியாகவும் ஆக்கிக் காட்டியது போல, தானும் தன் ரசிகர் மன்றங்கள் மூலம் செய்து காட்டிவிட முடியும் என்று நம்பிய சிவாஜி கணேசன் தன் முயற்சிகள் எல்லாவற்றிலும் தோல்வி அடைந்தார். எம்.ஜி.ஆரைத் தன் எதிரியாகக் கண்டு தனிக் கட்சி ஒன்று தொடங்கினார். தேர்தலில் நின்றார். அவர் வெற்றி பெற்றதாக செய்தி இல்லை. காங்கிரசில் சேர்ந்தார். காங்கிரசுக்கு அவர் வாக்குகள் சேர்த்துக் கொடுத்ததாக செய்தி இல்லை. ஆனால் தி.மு.க ஆதரவு இல்லையெனில் எம்.ஜி.ஆர். இல்லை என்று தமிழக அரசியலிலே மிக தந்திரசாலி என்று பெயர்பெற்ற கருணாதி கணக்குப் போட்டார். அவர் கணக்கும் எம்.ஜி.ஆர் விசயத்தில் படு பயங்கரமான தோல்வி அடைந்தது. எம்.ஜி.ஆர் உயிருடன் இருந்த வரை, ஏன் அவர் நினைவிழந்து கிடந்த நிலையில் கூட கருணாதியால். எம்.ஜி.ஆரை ஏதும் செய்யமுடியவில்லை. எனவே எம்.ஜி.ஆர் பெற்ற வெற்றி எல்லாம், கழகம் தந்த வெற்றி அல்ல, சினிமா தந்த வெற்றியும் அல்ல. எம்.ஜி.ஆர் என்ற தனி மனிதரின் வெற்றி.

அதற்கு சினிமாவில் தான் ஏற்படுத்திக் கொண்ட ஏழைபங்காளன், அரசு எதேச்சாதிகாரத்திற்கு எதிராக மக்களுக்காகப் போராடுபவன் என்ற பிர-திமை, சினிமா பிரதிமை மட்டுமல்ல, அது எம்.ஜி.ஆர். என்ற தனி மனிதரின் குணத்திலிருந்து அவரது வாழ்க்கை பற்றி மக்கள் அறிந்த காலத்திலிருந்து எழுந்த வரலாற்றிலிருந்து பிறந்தது. வாழ்க்கை உண்மையை ஆதாரமாகக் கொண்டு உருவாக்கப் பட்ட சினிமா பிரதிமை அது. அந்த பிரதிமைக்கு ஏற்றாற்போலவே அவர் கருணாநிதியோடு மோதிய போதும் தேர்தலில் தி.மு.க. வுக்கு எதிராக நின்றபோதும், அவர் ஏழைபங்காளன், அரசு எதேச்சாதிகாரத்தை எதிர்ப்பவர் என்ற பிரதிமைக்கு வலுச் சேர்த்தது தி.மு.க அரசும் கருணாநிதியும் பெற்றிருந்த ஊழல் அரசு யதேச்சாதிகார அரசு என்ற அவப்பெயர். ஆக இதையெல்லாம் ஒரு பொது விதிக்குட்படுத்தமுடியாது. எம்.ஜி.ஆர் பெற்ற வெற்றிகள் அவரது ரசிகர் மன்ற வெற்றி மாத்திரமோ, சினிமா பிரதிமை பெற்ற வெற்றி மாத்திரமோ, தமிழ் மக்களின் அபத்த எல்லைக்கு எடுத்துச் செல்லப்பட்ட சினிமா மோகம் மாத்திரமோ இல்லை.



எம்.ஜி.ஆரின் கருணாதிக்கு எதிரான முதல் தாக்குதலே "கட்சி பெற்ற பணத்துக்கு கணக்குக் காட்டு" என்பதுதான். அதற்கு கருணாதி அளித்த பதில், கட்சியிலிருந்து எம்.ஜி.ஆரை விலக்கியது தான். கணக்கு அல்ல. இப்போராட்டம் எம்.ஜி.ஆர் தனிக் கட்சி தொடங்கி, தேர்தலில் வெற்றி பெற்று தமிழக அரசைக் கைப் பற்றியது தான். அதன் பின்னர் எம்.ஜி.ஆர் உயிருடனிருந்த வரை கருணாதியால் அவரை அரசியலிலிருந்து அகற்ற முடியவில்லை. 'என்னை 11 வருடங்கள் தண்டித்தது போதாதா? இனி ஒரு முறையாவது எனக்கு வாய்ப்பு அளிக்கமாட்டீர்களா என்று தேர்தல் கூட்டங்களில் கருணாநிதி கேட்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார். எனவே எம்.ஜி.ஆரின் தனித்த பிரதிமையில் சினிமா நடிகர்களையெல்லாம் பார்ப்பது தவறு. வெறும் சினிமா கட்-அவுட் கள் எல்லாம் தம்மை முதன் மந்திரிகளாக பார்த்துக் கொள்ளும் பொது விதிக்குக் காரணம், தமிழ் மக்களின் விபரீதமான சினிமா மோகம், அதன் விளைவுகள். இந்த சினி-மா மோகத்தில், சாதாரண பொது புத்தி கூட செயல்படுவதில்லை. கலை உணர்வு என்பது பற்றி பேச்சே இல்லை.

ஆனால், எம்.ஜி.ஆரின், ஜெயலலிதாவின், பின் ஆந்திராவில், என்.டி.ராம ராவின் அரசியல் வெற்றிகள் மாத்திரமே பலரின் இருதயத்தில், சிந்தனையில் எல்லை மீறிய ஆசைகளையும் கனவுகளையும் கொழுந்து விட்டெரியச் செய்துள்ளது. சினிமா நடிகராக இருந்தால் மட்டும் போதாது, என்பது பலருக்கு, பல முன்னுதாரணங்கள் இருந்த போதிலும் புரிவதில்லை. கேரளாவில், பிரேம் நசீர், தமிழகத்தில் சிவாஜி கணேசன், எஸ்.எஸ் ராஜேந்திரன், கர்னாடகாவில் ராஜ் குமார், வட இந்தியாவில், அமிதாப் பச்சன், சத்ருகன் சின்ஹா போன்றோர் எம்.ஜி.ஆர் பெற்ற அரசியல் வெற்றியில் நூற்றுக்கு ஒன்று என்ற அளவில் கூட பெற முடியவில்லை என்பதை இப்போது ஆசைக் கனவுகள் காணும் தமிழக நடிகர்கள் காண பிடிவாதமாக மறுக்கிறார்கள்.



தன்னை சமூகத்தோடு அதன் சுக துக்கங்களோடு பிணைத்துக்கொண்ட அதற்காக பல இழப்புகளை எதிர கொண்ட மனிதர்களைக் கொண்ட வரலாறு, மரபு, தமிழ் நாடக, சினிமா உலகில் உண்டு. அது ஒரு நீண்ட

தொடர்ச்சி18ம் பக்கம்


17 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

**யோகாஸ்**

**குறுக்கு எழுத்துப் போட்டி இல. 163**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | 3 | | | 4 |
| | | | | | | 5 | |
| | 6 | | | 7 | | | |
| 8 | | | | | | | |
| | | 9 | | | 10 | | |
| | | | | | | | |
| | 11 | | | | 12 | | |
| 13 | | | 14 | | | | 15 |

**இட - வல**

1. இணங்கு
5. ஏர் கொண்டு செய்யும் தொழில்
6. இரு சமபாகங்களில் ஒன்று (வல- இட)
7. ஒரு சுவை
8. அனுபவத்தில் அறிந்த
9. இறைச்சி (வல-இட)
10. பாம்பின் வசிப்பிடம்
11. எதற்கு(வல - இட)
13. நடத்தை
15. வீடு வேய ஊதவுவது (வல-இட)

**மேல் - கீழ்**

1. சரி பார்த்தல்
2. நீர் இறைக்க உதவும்
3. மரக்கிளை
4. ஔவியம்
6. யானையை வழி நடத்துபவன்
9. உணவு (கீழ்-மேல்)
11. ஒரு எண்
12. ஒரு நிறுத்துக் குறி (கீழ் - மேல்)
13. ஆரம்ப எண் (கீழ்-மேல்)
14. வயல் (கீழ்-மேல்)
15. ஒலி (கீழ்-மேல்)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| பா | ல | சி | ங் | க | ம் | | கி |
| லா | | த் | | டு | த | | ளி |
| டை | ட் | தி | | கு | ரு | | நொ |
| க் | | ர | | | மா | | ச் |
| க | ட | ம் | ப | ன் | | நி | சி |
| ட் | | | ண் | க | | யா | |
| டி | | | | ச | | ய | |
| | ஒ | ட் | டி | யா | ண | ம் | |

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக் கூடிய $15, $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் May 28, 2005க்கு முன்னர் விளம்பரம் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

162இல் வெற்றி பெற்றோர்

1) Thevanesan, Donmills
2) Mrs. K. Nanthini, Toronto

- ஆட்டிறைச்சி வியாபாரத்தில் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!
- அன்றாட சந்தையில் மரக்கறி, மீன் வகைகளை தினமும் தருவித்துக் கொடுப்பவர்கள்.
- வாடிக்கையாளர்களின் தொகையில் உயர்ந்தவர்!

**(416) 267-0408** 731 - 733 Kennedy Road [Ken-Mark Plaza]



**WAREHOUSE SALE**



**நம்பிக்கை, தரம், குறைந்த விலையில் நிறைந்த பொருட்கள் விசேட மலிவு விற்பனையில் உண்டு.**



- நம்பமுடியாத, வேறு எங்கும் பெறமுடியாத விலையில் Blankets.
- விதம்விதமான Shirts, T Shirts வகைகள்
- பெரியவர்களுக்கான Gloves, Shoes
- சமையலுக்குத் தேவையான பொருட்கள்
- Traveling Suitcase

இன்னும் பல பொருட்கள் மிகக் குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: Raja / Shawn

**(416) 412.6180**

**40 Nugget Ave.**
**Unit #8**
**Mccowan & Nugget**



# குறிப்பறியமாட்டான்

எங்கள் பள்ளிக்கூடத்தில் 21 பேர் பல்கலைக்கழக நுழைவுத் தேர்வுப் பரீட்சை எழுதினோம். அதிலே 19 ஆண்கள் இரண்டு பெண்கள். நான் அப்போது பௌதிகம் என்றும் இப்போது இயற்பியல் என்றும் அழைக்கப்படும் பாடத்தில் மிக மோசமாகச் செய்திருந்தேன். பரீட்சை முடிவுகள் வரும் தினம் நெருங்கியது. வாழ்க்கையில் ஒரு பெரிய அடியை எதிர்பார்த்து நாட்களைக் கழித்தேன்.

அப்பொழுது ஒரு பெரிய தவறு நேர்ந்தது. எங்கள் பள்ளிக்கூடத்தில் இருந்து ஏழு பேரை செயல்முறை பரீட்சைக்கு கொழும்புக்கு வரும்படி பல்கலைக் கழகம் அழைத்திருந்தது. அந்த ஏழு பேரில் என் பெயரும் இருந்தது. எங்கள் பௌதிக ஆசிரியர் ஒரு கேரளக்காரர். அவர் எங்களைக் கடைத்தேற்ற படாதபாடு பட்டிருந்தார். பட்டியலில் என் பெயர் இருந்தது என்னிலும் பார்க்க அவருக்கு கூடிய ஆச்சரியத்தை கொடுத்தது. பௌதிக செயல்முறை பாடம் நாளின் கடைசி பீரியட் என்றபடியால் நான் அநேகமாக அந்த வகுப்புக்கு போவதில்லை. கட் அடித்துவிடுவேன். அங்கே நியூட்டனின் ஈர்ப்புவிசை சோதனைகள் நடக்கும்போது நானும் அதே சோதனையை பெண்கள் பள்ளிக்கூட வாசல்களில் நடத்திக் கொண்டிருப்பேன்.

## அ. முத்துலிங்கம்

பௌதிக மாஸ்டர் நான் அரும்பொட்டாக பாஸ் பண்ணியிருக்கவேண்டும் என்ற கருத்தை தெரிவித்தார். செயல்முறை பரீட்சையில் ஆகக்கூடிய புள்ளிகள் எடுத்தால் தேர்வுப் பரீட்சையில் சித்தியடைவதற்கு நல்ல சான்ஸ் இருக்கும் என்றார்.

கொழும்புக்கு போவதற்கு இன்னும் பத்து நாட்கள் அவகாசம் இருப்பதால் நான் எந்த நாள் எந்த நேரம் என்றாலும் சோதனைக்கூடத்துக்கு வந்து செயல்முறை பரீட்சையில் என் திறமையை கூராக்கலாம் என்று சொன்னார். அத்தோடு நிற்காமல் சோதனைக்கூடம் பள்ளிக்கூடத்தின் தென் கிழக்கு மூலையில் இருக்கும் பச்சை கட்டடம் என்ற அதிகபட்ச தகவலையும் தந்துவிட்டு மறைந்துபோனார்.

செயல்முறை பரீட்சைக்கு தெரிவான நாங்கள் ஏழு பேரும் யாழ்ப்பாணம் ஸ்டேசனில் இருந்து ஒரே நாளில், ஒரே ரயிலில் கொழும்புக்கு பயணமானோம். அதில் காந்தருவதத்தையும் இருந்தது மூன்றுபேருக்கு கரை கொள்ளாத மகிழ்ச்சி. ஏனென்றால் அந்த மூன்றுபேரும் அவளை காதலித்தார்கள். அது அவளுடைய உண்மையான பெயர் அல்ல. நடராசா சூட்டியதுதான். சீவகசிந்தாமணியில் வரும் காந்தருவதத்தைபோலவே இவள் இருக்கிறாள் என்றும் இவள் சிரிக்கும்போது அறையில் வெளிச்சம் கூடுவதாகவும் அவன் சொன்னான். 220 றாத்தல் எடை உள்ள அவன் சொன்னதை எதிர்க்க ஒருவருக்கும் துணிச்சல் வரவில்லை.

நான் கொழும்பில் இரண்டு நாள் தங்கி பரீட்சை எடுப்பதற்கு என் மாமாவின் நண்பர் கனகராசாதான் ஏற்பாடு செய்தார். அஞ்சுலாம்படி சந்திக்கு என்னை அழைத்துப்போனார். நான் எதிர்பார்த்தபடி அங்கே அஞ்சு லாம்புகள் இருக்கவில்லை. ஆனால் இரவிரவாக கூட்டுச் சேர்ந்த ஐம்பது விதமான வாசனைகள் காலை வேளைகளில் அங்கே வெளியே திறந்து விடப்பட்டன. அந்த மணங்களில் புகையிலை, வாழைப்பழம், சீமெந்து, மண்ணெண்ணெய், மாட்டுச் சாணி, கருவாடு என்று சகலதும் இருக்கும். மரத்திலான படிகளில் ஏறிப்போய் இரண்டாவது மாடியில் ஒரு சிறிய அறையை எனக்கு கனகராசா காட்டினார். தண்டவாளத்து சிலீப்பர்கள் போல ஆறுபேர் அடுக்கடுக்காக அங்கே படுத்திருந்தார்கள். அந்த ஜனசமுத்திரத்தில் ஒரு துளியாக நான் கரைந்து போனேன்.

நான் காலையில் எழுந்து பார்த்தபோது அங்கே படுத்திருந்த அத்தனை பேரும் வேலைக்கு போய்விட்டார்கள். கனகராசா மாத்திரம் எனது துயில் கலையும்வரை காத்திருந்தார். முதல் நாள் இட்லிக்கு போட்டு மிஞ்சிய மாவில் சுட்ட நாலு தோசையை எனக்கும் தந்தார். தான் லேட் என்பதை எனக்கு உணர்த்துவதற்காக நின்றபடியே தோசையை விண்டு விண்டு விழுங்கிக்கொண்டிருந்தார். கையிலே இருந்த தோசையை வைக்க வாயை திறந்தபோதெல்லாம் ஏற்கனவே வாய்க்குள் இருந்தது கீழே விழுந்தது. அவர் அதை சட்டை செய்யவில்லை. தனக்கு கிட்டங்கியில் கணக்கெழுதும் வேலை என்றார். கிட்டங்கி என்றால் எனக்கு என்னவென்றே தெரியாது. கவர்னர் உத்தியோகத்துக்கு அடுத்த லெவல் என்பதுபோல "அப்படியா" என்றேன். மகிழ்ந்துபோனார். என்னுடைய பஸ் நம்பரை இன்னொருமுறை அவரிடம் கேட்டு உறுதி



செய்துகொண்டு ஆர்க்கிமெடிஸ், நியூட்டன், போயில்ஸ், கூலோம்ப் போன்ற மாபெரும் விஞ்ஞானிகளுக்கு என்னால் அன்று ஏற்படப்போகும் அபகீர்த்தியை நினைத்துக் கொண்டு புறப்பட்டேன்.

பரீட்சைக் கூடத்து கதவுக்கு வெளியே மாணவ மாணவிகள் எல்லாம் கூடி நின்றார்கள். சரியாக ஒன்பது மணிக்கு மணி அடித்தது. அதே நேரத்தில் கதவும் திறந்தது. நாங்கள் எல்லாரும் வரிசையாகவும், இடித்துப் பிடித்துக்கொண்டும் உள்ளே நுழைந்தோம். எங்கள் நம்பர் பிரகாரம் ஒவ்வொருவருக்கும் சோதனை கருவிகள் மேசைகளில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. எனக்கு ஒதுக்கப்பட்ட மேசையின் முன்பு நின்றேன். அந்தக் கருவிகளை முன்பு வகுப்பறையிலோ, விஞ்ஞானக்கூடத்திலோ, பாடப் புத்தகத்திலோ நான் பார்த்த ஞாபகம் இல்லை.

எதற்கும் உதவக்கூடும் என்பதுபோல கேள்வித்தாளை ஒருமுறை படித்துப் பார்த்தேன். விஞ்ஞானக்கூடத்தை சுற்றிலும் நோட்டம் விட்டேன். காந்தருவதத்தைக்கு குவியக் கண்ணாடியும், மெழுகுதிரியும் கிடைத்திருந்தது. அவள் மெழுகுதிரியை கொழுத்தி அதன் பிம்பத்தை பல கோணங்களில் அவதானித்தாள். மெழுகுதிரியில் வெளிச்சம் குறையும் போதெல்லாம் அவள் பல்லை திறந்துகாட்டி சமாளிப்பாள் போலும் என்று நான் அந்த சமயத்திலும் நினைத்துக் கொண்டேன். அவள் ஏற்கனவே மேசையில் குனிந்துகொண்டு உருண்டையான எழுத்துக்களால் தன்னுடைய வினாத்தாளை நிரப்ப தொடங்கியிருந்தாள்.

பூலோகசிங்கம் இன்னும் அதிஸ்டக்காரன். அவனுக்கு கிடைத்தது பெண்டுலம் சோதனை. இதை அவன் நூற்றிருபது தடவைகளாவது பயிற்சி செய்திருப்பான். பத்மநாபனுக்கு எட்டாம் வகுப்புக்காரர்கள் செய்யும் போயில்ஸ் விதிகள். நடராசாவின் மேசையில் ஓம்ஸ் லோ சம்பந்தப்பட்ட மின்சார கருவிகள் பொருத்தப்பட்டிருந்தன. நடராசா மின்சாரத்திலும் வேகமாக வேலைசெய்தான். இன்னும் சில நிமிடங்களில் முடித்துவிடுவான் போல பட்டது.

மறுபடியும் என் மேசையை பார்த்தேன். விசைச்சுருளும், இரும்புக் குண்டுகளும் மனித கைபடாமல் அப்படியே பளபளவென்று இருந்தன. விசைச்சுருளின் இழுவை நீளத்தை அளக்க வசதியாக ஒரு ரூலரும் செங்குத்தாக பொருத்தப்பட்டு என் அசைவுக்காக காத்து நின்றது. ஒரு தூரக்கண்ணாடியும் இருந்தது. செய்முறைக் குறிப்புகளும் ஒரு சமாந்திரமும்

தொடர்ச்சி 17ம் பக்கம்


# SRI PARADISE Catering & Take -out

416.269.4509 / 416.509.2454

292 Markham Road, Scarborough, ON

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திங்கள் - செவ்வாய் சிங்கப்பூர் நூடில்ஸ் (கோழி மரக்கறிகளுடன்) | புதன் - வியாழன் கொத்துரொட்டி ஆடு மாடு கோழி | வெள்ளி மரக்கறிச்சாப்பாடு 5 மரக்கறி, சலாட், பப்படம், ரசம், மிளகாய்ப்பொரியல், அச்சாறு, பாயாசம், வடை | Daily special மரக்கறிச்சாப்பாடு 3 மரக்கறி சலாட், பப்படம் ரசம், மிளகாய்ப்பொரியல், அச்சாறு | Dinner Special சிங்கப்பூர் நூடில்ஸ் கோழி மரக்கறிகளுடன் | சனி - ஞாயிறு Lunch Special வாழையிலைச் சாப்பாடு கோழி, ஆடு, மாடு, இறால், நண்டு, மீன், முட்டை, கருவாடு, அச்சாறு, கட்டைச் சம்பல், மீன் பொரியல், கட்லட், உருளைக் கிழங்கு, நெத்தலி பிரட்டல், கத்தரிக்காய் பிரட்டல் |
| $2.99 | $2.99 | $4.50 | $2.99 | $2.99 | $5.99 |



| | | |
|---|---|---|
| பரடைசின் Special புரியாணி, தண்டூரி சிக்கன், இஞ்சிச் சம்பல், salad | Dinner Special மசாலா தோசை, சாம்பாறு, சம்பல் | Daily Special பரடைசின் Special புரியாணி சிக்கன்கறி சலாட் முட்டை |
| $2.99 | $1.99 | $2.99 |

*Sri Paradiase Specials*

- 10LB அவித்த கோதுமை மா - $3.99
- ரொட்டி .50¢
- விசேட வைபவங்களுக்குத் தேவையான 6 வகையான Combo package. 20 பேர் கொண்ட சபைக்கு $99 மட்டுமே.
- மாதத்திற்குரிய சாப்பாடு - 1 நேரச் சாப்பாடு 1 மாதத்திற்கு - $99.00
  2 நேரச் சாப்பாடு 1 மாதத்திற்கு - $150.00

சமையலில் அனுபவம் உள்ளவர்கள் வேலைக்குத் தேவை. தொடர்பு கொள்ளவும்

25 மேல் கொள்வனவு செய்வோருக்கு 10LB அவித்த மா இலவசம்

மேலைத் தேசத்தில்

கீழைத் தேசத்து வாசனைகள்...

Niru BRAND ®

எமது புதிய அறிமுகங்கள்




Imported & Marketed By:

**NIRU ENTERPRISES INC.**
76, Howden Road, Scarborough.
Ontario, CANADA, M1R 3 E 4
Tel: (416) 750 1976
Fax: (416) 750 8779
www.niru.com

**NIRU (EUROPE) LTD.**
Unit 11, Mitcham Industrial Estate,
85, Streatham Road, Mitcham,
Surrey, CR4 2AP. U.K.
Tel: +44 208 640 8228
Fax:+44 208 640 8312

# தற்காலிகமான & நிரந்தரமான ஆயுள் காப்புறுதி திட்டம்

**‘ரேம் இன்சூரன்ஸ்’ என குறிப்பிடப்படும் தற்காலிகமான ஆயுள் காப்புறுதி திட்டமோ. (Term Insurance) அல்லது நிரந்தரமான வாழ்நாள் முழுவதும் உள்ள ஆயுள் காப்புறுதி திட்டமோ (Whole life insuracne plan) சிறந்தது என சிபார்சு பண்ண முடியும்?**

இது அவரவர்களின் நோக்கம் எது? என்பதனை அடிப்படையாக வைத்து எந்த ஒப்பந்தம் தேவை என்பதனை தெரிவு செய்ய வேண்டும். அந்த நோக்கங்களில் முதலாவது
1. வாழவேண்டிய வயதில் உயிர் இழப்பு நடந்தால் குடும்பத்திற்கு ஒரு பாதுகாப்பு (Pre matured death). அதாவது தங்கியிருக்கும் பிள்ளைகள் சுமைகள் என்ற பொறுப்புகள் நீங்கும் வரை மட்டும் பாதுகாப்பு தேவை என கருதுபவர்கள் தற்காலிகமான ஆயுள் காப்புறுதி திட்டம் பெற்று கொள்ளலாம். விரயம் குறைவு. குடும்பதிற்க்கு ஒரு பாதுகாப்பாக இருக்கும். ஏதாவது ஒரு ஆயுள் காப்புறுதி உள்ளது என்ற நிம்மதியும் இருக்கும்.


**சிவ. பஞ்சலிங்கம் B. Com,**

(Licensed Insurance Broker)

காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:

**416.321.0999**


இரண்டாவது, மேலே குறிப்பிட்ட நோக்கத்துடன் மேலதிகமாக தமது சந்ததி வம்சாவழியினருக்கு தமது உயிர் இழப்பினை தொடர்ந்து ஒரு திரண்ட முதலீட்டினை வழங்க வேண்டும் என நினைப்பவர்களுக்கு வாழ்நாள் முழுவதும் உள்ள ஆயுள் காப்புறுதி திட்டம் (Whole life insurance plan) நல்லது.

தமது வாரிசுகளுக்கு சந்ததியினருக்கு விட்டு செல்லும் முதலீட்டு திட்டங்களில் ஆயுள் காப்புறுதியினை விட திறமையான முதலீட்டு திட்டம் எதுவும் இருக்கமாட்டாது. ஒரு மில்லி யனுக்கு ஆயுள் காப்பறுதி செய்பவர் நூறு ஆண்டுகள் வாழ்ந்தாலும் எவ்வளவு தொகை யினை மாத கட்டுபணமாக செலுத்த போகின்றார். சிறு சொற்ப தொகை!
சந்ததியினருக்கு மிக பெரிய முதலீடு பணம்!
உயிர் இழப்பு என்பது மறுநாள் நடந்தாலும் பெரிய முதலீடு. நூறு ஆண்டுகளுக்கு பின்னர் நடந்தாலும் பெரிய முதலீடு.

ஆனால் விலை என்பது தற்காலிகமான ஆயுள் காப்புறுதி திட்டத்தினை விட அதிகமாகவே இருக்கும். இங்கு தீர்மானம் என்பது ஆயுள் காப்புறுதி பெறுபவரின் ஆழமாக சிந்திக்கும் நோக்கத்திலேயே தங்கியுள்ளது. தொடர்ந்தும் பணம் செலுத்தும் நிலைமையில் உள்ள அவரின் வருமானத்திலும் தங்கியுள்ளது.

**மலிவான விலையில் 65 வயது வரையுள்ள தற்காலிக ஆயுள் காப்புறுதி திட்டம் (Term Insuracne) போதும். மிகுதி பணத்தினை பிரத்தியேகமாக ஏனைய முதலீடுகளில் வைப்பு செய்யுங்கள். அதுவே சிறந்தது என்ற தாரக மந்திரத்தினை ஒரு குறிப்பிட்ட காப்புறுதி கம்பனியின் முதல்வர்கள் குறிப்பிடுவது சரியா?**

அவர்கள் குறிப்பிடுவது ‘Buy a Term! Invest the difference’ என்ற ஒரே மந்திர கோட்பாடு ஆகும். ஒரு வகையில் அது நியாயமானதாகவும் இருக்கலாம். அதே கோட்பாடு மட்டுமே ஆயுள் காப்புறுதி என்ற கொள்கையில் நியாயமானது. மற்றெல்லாம் போலியானது என்ற தாரக மந்திரத்தினை மட்டும் குறிப்பிட்டு கொண்டு இருந்தால் அது ஒரு முட்டாள் தனம். அது தவிர அந்த முட்டாள் தனத்தின் செயல்வடிவமாக நீண்ட காலமாக தொடர்ந்து ஒரு நிரந்தரமான வாழ்நாள் முழுவதும் உள்ள ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்தில் (whole life plan) சேர்ந்து பணம் செலுத்தி கொண்டிருப்பவரை ஓடி வலிந்து சந்தித்து குழப்பி அடித்து மூளை சலவை செய்து (Brain wash) வலிமையில் இருக்கும் பத்திரத்தினை தமது நன்மை கருதி ரத்து செய்ய பண்ணினால் அது

‘வாடிக்கையாளர் ஒருவருக்கு செய்யும் அநியாயம்’
‘காப்புறுதி தொழிலில் செய்யும் ஒழுக்க கேடு (Unethical insurance action)

இதனால் செலுத்திய பணத்தினை இழந்து நட்டம் அடைபவர் வாடிக்கையாளர். நன்மை அனுபவிப்பவர் முகவரும் கம்பனியும்.

இங்கு ஆயுள் காப்புறுதி பெறுவது இரு நோக்கம்.

1. குடும்பத்திற்கு ஒரு பாதுகாப்பு - அவர்கள் கோட்பாட்டின்படி இது மட்டும் இருந்தால் போதும் என்பது இவர்களின் தத்துவம். 65 வயதுக்கு பின்னர் உயிர் இழப்பு நடந்தால் பாதிக்கப்படுபவர்கள் இல்லை என்பது ஒரு முடிவு. ஆனபடியால் இந்த பாதுகாப்பு மட்டும் போதும் என்பது அவர்கள் கருத்து.

2. மேலே குறிப்பிடப்பட்ட பாதுகாப்புடன் தமது உயிர் இழப்பின் பின்பு குடும்பத்தினருக்கு வாரிசுகளுக்கு ஒரு திரண்ட, வரையறுக்கப்பட்ட வரி இல்லாத முதலீடு ஆக இந்த ஆயுள் காப்புறுதி பணத்தினை உருவாக்க வேண்டும் என்ற நியாயத்தினை அவர்கள் ஏற்று கொள்ளமாட்டார்கள். எனவே அந்த கோட்பாடு என்றுமே சரியானது அல்ல.

இந்த தற்காலிக ஆயுள் காப்புறுதி திட்டத்தினால் இரண்டாவது நோக்கத்தினை அடைய முடியாது. அவ்வாறு நோக்குபவர்களையும் முறியடித்து விடுவார்கள். அது எப்படி என்றால்,
ஏதாவது ஓய்வூதிய திட்ட முதலீடுகளில் மேலதிக பணத்தினை முதலீடு செய்யுங்கள் என்பதாகும். இவ் முதலீடுகளின் வளர்ச்சி என்பது நிட்சயமானதா? இவ் முதலீடுகளை பணமாக திருப்பி பெறும் போது எவ்வளவு வரி செலுத்த வேண்டும். சரி! நிரந்தரமான வாழ்நாள் முழுவதும் உள்ள ஆயுள் காப்பறுதி திட்டத்தில் (whole life plan) முதலீட்டு திட்டத்துடன் உள்ள ஆயுள் காப்புறுதி திட்டம் (universal life insurance plan) உள்ளது என்பது பற்றி தெரியாதா? நீண்ட காலம் உயிர் வாழ்வோம் என எதிர்பார்ப்பவர்களுக்கு வாழ்நாள் முழுவதும் உள்ள நிரந்தரமான திட்டம் (whole life plan) ஒரு பாதுகாப்பு, மலிவான சந்ததிக்குரிய முதலீட்டு திட்டம் என இரு அம்சங்கள் உள்ளது என்பதனை கருத்தில் கொள்ள மாட்டார்களா?

ஏனெனில் இங்கு ஒரு மில்லியனுக்கு ஆயுள் காப்புறுதி செய்த ஒருவர் நூறு ஆண்டுகள் இந்த உலகில் வாழ்ந்தாலும் செலுத்தும் பணம் ஒரு மில்லியன் அல்ல. சொற்பமானது ஆகும். இந்த நிலைமையினை தற்காலிக ஆயுள் காப்பறுதி திட்டத்தினால் அடையமுடியாது. “முதலீடு செய்பவரின் (invest the differnce) என்பது நியாயம் இல்லை என்றும் அல்ல. தற்காலிக ஆயுள் காப்பறுதி மட்டும் (buy all term) என்ற கோட்பாடு சரியானதும் அல்ல. அவரவர் நோக்கங்கள், வயது, நிதிநிலமை ஆகியனவற்றுக்கு ஏற்ற மாதிரி முடிவு பண்ணுவதே சிறந்தது. தற்காலிகமான ஆயுள் காப்புறுதியாக இருந்தாலும், ஒப்பீட்டு அடிப்படையில் (Shop around) பல கம்பனிகளிலும் பரிசீலனை செய்து பார்க்கும் போது மலிவாக கிடைப்பது ஏராளம். இங்கு தேவையானது சுயமான அலசல், ஆய்வு, திட்டம், ஒரு உறுதியான முடிவு, இது வாடிக்கையாளரின் சிந்தனை யில், நேர்மையான முகவரின் வழிகாட்டலில் தங்கியுள்ளது.






# MOHAN

## HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

**TEL: 416-298-7537 / 416-291-3022**

5200 Finch Ave, East Suite 210
(At Middle Field), Scarborough, M1S 4Z4

# DEBT & MORTGAGE SOLUTIONS !!



- கடன் தொல்லையா?
- கடன்காரர்களின் தொந்தரவா?
- Credit பிரச்சனையால் Mortgage கிடைக்கவில்லையா?

## கவலைப்படாதீர்கள்!

அனைத்து வித பொருளாதார பிரச்சனைகளுக்கும் தீர்வு காண

முதல், இரண்டாவது, மூன்றாவது
Mortgage பெற அழையுங்கள்

## ராஜ்

416-835-6695

## Call : 'RAJ'

for all kinds of Debt & Mortgage Solution
Lendingtree.ca

# SAFETY TRUCKS

## Training School Ltd.

Training & Trucking Classes A, D & Z




In Classes
- 365 (Learning Permit)
- Log Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing
- Defensive Driving Course

- தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
- One On One Training
- அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.
- கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம். (11 ஆம் ஆண்டு)
- We Accept Welfare & Unemployment Insurance
- வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.

18 Years Canadian
Experience with Trucks

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:

## YOGAN SOCKALINGAM

Truck Driving போதனாசிரியர்

905-793-9546 / 416-616-5979

250 Summerlea Road, Brampton, ON

# Neelam Silk

சுபமுகூர்த்தப் பட்டுக்கு என்றுமே இராசியான இடம்

'தமிழர் மத்தியில் தரமான பட்டுப் புடவை மாளிகை'

## நீலம் சில்க்

- SONALIKA PURE SILK
- JARDHOSHI SATIN & CREPE SILK
- JAPAN CRYSTAL SILK
- JAIPUR CRYSTAL SILK
- VASUNTHARA NETWORK CREPE



பட்டுத் தெரிவுகள்
அனைத்துக்கும்

"நீலம் சில்க்"

T.P: 416-778-7455 Fax: 416-778-8484
1453 GERRARD STREET, EAST (INDIAN BAZZAR)

T.P: 416-759-2002
2378 EGLINTON AVE., E. (Kennedy Rd. & Eglinton Ave, Scar.)

# சொல்லத்தான் நினைக்கிறேன்




ஆட்டிலறி அன்னம்மாவும் செக்கண்புளோர், செல்லம்மாவும் சூலமங்கலம் சகோதரிகள் போல இலங்கை சுற்றுலா சென்று வந்தபோது படையப்பா சாறியுடன் காட்சியளித்ததைக் கண்டு உலகர் அதிர்ந்து போனார். ராசம்மாக்கா இன்னும் வெளிக்கிடேலையே என்று கேட்க ஒரு நிமிடம் என்று சத்தம் கேட்டது. ஆனால் ராசம்மா வெளியில் வர 15 நிமிடம் சென்றது. அவ்வை சண்முகி போல சாறியை கட்டிக் கொண்டு வர உலகருக்கு ஒன்றுமே புரியவில்லை. ராசம்மாக்கா இந்த சாறி ரூ இன் வண் வெயிலுக்கு ஒரு கலர் நிழலுக்கு ஒருகலர் எண்டா செக்கண்புளோர் செல்லம்மா. உலகண்ணையின்ரை தலைமுடி மாதிரி பிளாக் அன் வைற் எண்டு சொல்லி சிரிச்சா ஆட்டிலறி அன்னம்மா.




ரூபி ரூபி ரூபி என நீதிமன்றத்தில் கூப்பிடுவது போல கூப்பிட தோழில் இருப்பது கையிலும் இடுப்பில் இருப்பது நிலத்திலும் தேய ரூபி சாறியுடன் வரும் காட்சி பாடசாலைகளில் நடைபெறும் உடை அலங்காரக்காட்சியை போல இருந்தது. அது மட்டுமல்ல ரூபி வெட்கப்பட்டுக் கொண்டு வந்தது தான் அதிசயம். திருமண நாளிலன்று மணவறைக்கு வரும் பொழுது உலகர் ரூபனின் காதில் கடுமையாக ஏதோ சொல்ல, ரூபன் வீடியோ எடுப்பவரிடம் ஏதோ சொல்ல, வீடியோ எடுப்பவர் நல்ல தமிழில் வெக்கப்படுவது போல குனிந்து நாணிகோணி வாருங்கோ எனச் சொல்ல, அந்தக் காட்சி திறமையாக படமாக்கப்பட்டது. (மன்னிக்கவும்) திருமணம் அழகாக வீடியோபடம் பிடிக்கப்பட்டது. ஆயிரம் ஆயிரம் டொலர் செலவழித்து சாறிகளை சேல், சேல் (Sale) என்றவுடன் வாங்கி, இருக்கவே இடம் போதாத அப்பாண்மென்டிலும், வீடுகளிலும் முடக்கி வைத்து பனிக்குளிரில் அழகான சாறியைக் கூட யாக்கெற்றால் மூடி மூன்று மணிநேரம் கலைநிகழ்ச்சிக்கு போய் வந்து என்ன பலன். எனது சாறியை மிடுக்குடன் காட்ட முடியிவில்லையே என கலங்கியவர்கள்.... எத்தனைபேர்?



இத்தனை அமளி துமளிக்கும் றிச்மண்ட் ஹில் பிள்ளையர் கொடியேற்றம் பார்க்க. அப்படியானால் உலகர்?



உலகண்ணை வெளிக்கிடுங்கோவன் ரூபன் இப்ப காரிலே வந்திடுவன் என ஆட்டிலறி அன்னம்மா சொல்ல ஏன் உலகண்ணை கோயிலுக்கு போறதெண்டு தெரியாதோ என செக்கண்புளோர் செல்லம்மா கேட்க ஏன் 2 நிமிசத்தில் நாலுமுழம் சுழட்டி கட்டிக்கொண்டு வெளிக்கிடுறது கஸ்டமோ? என ஆட்டிலறி அன்னம்மா கேட்க சந்தர்ப்பத்தை விட்டால் வீட்டில் முடங்கி கிடக்க வேணும். உடனே எழும்பி சினிமாவின் பாடல் காட்சிகளுக்கு உடைமாத்தி அடுத்த காட்சி வருவது போல பட்டுவேட்டி, பட்டுச்சால்வை திருமணத்தின்போது ராசம்மா கொடுத்த அழகான மஞ்சள்கலர் சேட்டுடன் அன்றைய உலகரா இன்றைய உலகரா என ராசம்மாவே கணக்கு போட முடியவில்லை. இளமை இடை, இடையே ஊஞ்சலாடுகிறது.



ஹாய்! உலகப்பு என்றபடி வந்தான் பிறிம்லி மீனாவின் மகன். பிறிம்லி மீனா சந்திரமுகி படத்தில் ஜோதிகா வந்தது போல வர ரூபன் கெதியா வாங்கோ கோயிலிலை பிறகு பாக்கிங் கிடையாது என்றபடி வந்தான். கார், வான் மிகக்குறைந்த காலத்தில் கோயில்களுக்கு செல்வதற்கு வாடகைக்கார் பிடித்து கார் ஓட்டுபவருக்கே இடம் கொடுக்காமல் நெரிந்து 4,5 குடும்பம் கோயிலுக்கு சென்ற காலம் அது?



உலகர் நினைத்துப் பார்த்தார். இப்போ பெரிய வான் கார் ஆனால் சேர்ந்து கோயிலுக்கு போக யார் விரும்புவார்கள். குடும்பத்தில் ஒருவர் கோயிலுக்கு போவதே அபூர்வம். சில கோயில்களில் சுவாமி காவுவதற்கே ஆட்கள் போதாது.

செல்லம்மா இந்த முறை செந்தியின்ரை வர்த்தகச் சோலையில் கனக்க சாறிக் கடையள் வருமாம். கன செலக்சன். சந்திரமுகி சாறி, மும்பை எக்ஸ்பிறஸ் சாறி, அடேயப்பா சாறிகளுக்கு கூட உள்ளூர் படங்கள் கலகலப்பு, புது உறவு மெதுவாக உன்னைத்தொட்டு, சுகம் சுகமே, தமிழிச்சி, வேலி...

உள்ளூர் படங்களின் பெயர்களை வைக்கமாட்டார்களா? இந்திய கலைஞர்கள் வந்து வரிக்கு வரி வெளிநாட்டில் தமிழையும் கலை கலாசாரத்தையும் வளர்ப்பது நீங்கள் தான் என்னும் பொழுது மனதில் உள்ள களை, வருத்தம் எல்லாம் பறந்து போகிறது. செந்ததமிழ் நாடெனும் போதினிலே இன்ப தேன் வந்து பாயுது காதினிலே. பாரதியே!



நாம் கனடிய தமிழர்கள் என்றவுடன் கனிரசம்போல் சுவைக்கு நாவினிலே நீங்கள் நன்றாக தமிழ் பேசுகிறீங்கள் நன்றாக உடுத்தி வந்திருக்கிறீங்கள் என அண்மையில் கனடா வந்திருந்த நடிகர் ஸ்ரீகாந் பேச வீடியோ லைற் சபையோரை படம்பிடிக்க ஜீன்சும், ரீ சேட்டும் அணிந்து வந்த பெண்கள் வெட்கப்பட்டதை நல்லகாலம் வீடியோ எடுக்கவில்லை.

**அடையாளத்துடன் வாழ்பவன் தான் இறந்தபின்னும் அடையாளம் காணப்படுகிறான்.**



கனடாவில் தொழிலுக்காக மொழி, பழக்கவழக்கமாற்றம் தேவைதான். தமிழும் கலையும், கலாசாரமும் பேணப்படட்டும். மெல்லிசை மன்னர் M.S விஸ்வநாதன் அவர்கள் 5, 6 மணிநேரம் சளைக்காமல் அனுபவத்தை அனுபவித்துப் பாடினார். தன்னோடிருந்தவர்களின் புகழ் பாடினார். இசையை ரசித்த நம் தமிழ்களைப் பாடினார். அடேயப்பா! வெள்ளை வேட்டி வெள்ளைச் சேட்டு.

இசையில் எத்தனையோ மாற்றங்களைச் செய்தார். ஆனால் அவர் மாறவில்லை. சொல்லத்தான் நினைக்கிறேன் உள்ளத்தால் துடிக்கிறேன்.

126

நகைச்சுவைத் தொடர்

## ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்


# MALVERN MONTESSORI SCHOOL



**10 Sewells Road, Scarborough (Sewells / Neilson)**

***Preparing your children for new experiences, challenges, and making them feel connected to a caring community***

APPLICATIONS ACCEPTED NOW!

## MONTESSORI PRE-SCHOOL

- AGES 2 TO 6 YEARS
- MORNING AND EVENING CLASSES
- LOW STUDENT ˆTEACHER RATIO
- READING, WRITING AND MATH EMPHASIZED
- HISTORY, GEOGRAPHY AND SCIENCE
- FRENCH INTRODUCTION
- MUSIC AND ART CLASSES
- BRIGHT SPACIOUS CLASSROOMS
- EXTENDED CARE HOURS ( 7.30am - 6.15pm)
- EXCITING SUMMER SCHOOL (JULY and AUGUST)

FOR ENROLLMENT PLEASE CALL (416) 724-8900

*"THE MONTESSORI METHOD OF EDUCATION DEVELOPS THE WHOLE PERSONALITY OF THE CHILD, NOT MERELY HIS INTELLECTUAL FACULTIES BUT ALSO HIS POWERS OF DELIBERATION, INITIATIVE, AND INDEPENDENT CHOICE WITH THEIR EMOTIONAL COMPLEMENTS."*

# NTE AUTO

**New Trade Engineering Inc.**




ஸ்காபரோவில் 14வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க வாகனத் திருத்த வேலைகளுக்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

Also Air Condition Service & Repair

SIVABALAN

416.750.1573

**என். ரி. இ. ஓட்டோ இங்க்**

151 NATUCKET BLVD., UNIT #12, SCARBO., ON

IN NEW MILLENNIUM WE ARE ENTERING 11TH YEAR SERVICE IN SCARBOROUGH.

# நீயே உனது முன்மாதிரி

வாழ்வில் பிறர் என்னை எப்படிப் பார்க்க வேண்டும், மதிக்க வேண்டும், நடத்த வேண்டும் என்பவற்றைப் பற்றி, நான் இடையறாது திட்டவட்டமான நியதிகளை ஏற்படுத்தி அதற்கிணங்கும் முகமூடியுடன் நடமாடி வருவதை இன்று மனப்பூர்வமாக உணர்கின்றேன்.

ஒவ்வொரு நாட்பொழுது விடிந்ததும், உன்னை நீ எப்படிப் பார்க்கிறாய், எவ்வாறு நடத்துகிறாய் என்பதை அவதானிக்க இன்று முதல் ஆரம்பிக்கிறாயா? ஸ்நானம் பண்ணும் போது உனது உடலை நீ எப்படிக் கையாள்கிறாய்? மென்மையாகவா? அல்லது முரட்டுத் தனமாகவா? உணவருந்தி உன்னையே நீ போஷிக்கும்போது, அதற்கு எவ்வளவு நேரத்தை, சக்தியை, கவனத்தைச் செலவிடுகின்றாய் என்பதை இன்று முதல் கவனித்துக்கொள். உனது சுயபோஷணையின் போது அத்தியாவசியமான விழிப்புணர்வுடனும் கவனத்துடனும் செயற்படுகிறாயா? அல்லது உனக்குத் தெரியாமலேயே தினமும் உன்னைச் சரிவரக்கவனிக்காமல் அவசர அவசரமாகப் பரபரக்கிறாயா? உன்னை நீ எவ்விதம் நடத்துகிறாயோ, அந்த முன்மாதிரியைப் பின்பற்றித்தான் மற்றவர்களும் உன்னை நடத்துவார்கள் என்பதைப் புரிந்து கொள்.

ஆத்மஸ்வரூபியாகிய நீ, உனது மனதை எப்படிக் கண்காணிக்க வேண்டும் என்பதையும் கவனத்தில் எடுத்துக்கொள். உன்னுடனேயே நீ சம்பாஷிக்கும் போது கோபித்துக் கத்தி ஏசுகிறாயா? கேள்விகள் கேட்கும்போது, உன்னை நீயே குற்றம் சாட்டிக் கொள்கிறாயா? மகிழ்ச்சியுடன் உனது எண்ணங்களை முழுமையாக அநுபவிக்கிறாயா அல்லது அரை குறையிலேயே இது சரியில்லை எனத் தீர்ப்பு வழங்கி நிறுத்தி விடுகிறாயா? உனது மனதில் இடைவிடாது எழும் எண்ணங்களை எப்படி எப்படி சிந்திக்கிறாய் என்பதைப்பற்றிய புதிய விழிப்புணர்வுடன் இன்று முதல் செயற்படு. இப்போதைக்கு வேறொன்றும் நீ செய்யத் தேவையில்லை.



உனது ஆன்மாவை எவ்வாறு போஷிக்கிறாய் என்பதைப் பற்றி அவதானமாயிரு. நாம் உண்மையில் எம் உடலுள் வாழும் ஆத்மஸ்வரூபிகள் என்பதைக் கொஞ்சமேனும் உணராது, தனி உடலுணர்வுடன் மட்டுமே பலர் வாழ்கின்றனர் என்பது மனவருத்தம் தரும் உண்மை. உனக்குப் புரியாதவற்றைப் பற்றி மனதில் எழும் கேள்விகளைக் கேட்க, உன்னை நீ அநுமதிக்கிறாயா? உன்னுடன் நீ ஏற்படுத்திய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத போது, அதன் காரணங்களை விவேகத்துடன் புரிந்து கொள்கிறாயா? அல்லது சகலதும் நூற்றுக்கு நூறு வீதம் சரி வரவேண்டும் எனும் பிழையான நோக்குடன், இரக்கமின்றி உன்னை நீயே சாட்டையால் அடித்து ஓடஓட விரட்டிக் கொள்கிறாயா? நெருக்கடிகள் சூழ்ந்து பிரச்சினைப்படுத்தும்போது உன்னை நீ எப்படிச் சமாளிக்கிறாய்?

அன்பானவரே! வழக்கமாக நீர் இந்த மாதிரி சிந்திப்பதே இல்லையல்லவா? இப்போதைக்கு இந்த விழிப்புணர்வோடு நீர் சும்மா இருந்தால் போதும். வேறொன்றும் செய்யத்தேவையில்லை.

உன்னை நீ எவ்வாறு மதிக்கிறாய், நடத்துகிறாய் என்பதைப் பற்றிய உன் அறிவு பெருகப் பெருக இதனால் பிறருக்கு நீ எடுத்துக் காட்டும் முன்மாதிரியைப் பற்றிய விழிப்புணர்வு கூடும். இப்போது, நீ மாறி ஒரு புதிய முன்மாதிரியை எடுத்துக்காட்டாக வைக்க வேண்டிய நேரம் கிட்டி விட்டதைக் தெளிவாகப் புரிந்து கொள்.

உன்னுடனே நீ, எவ்வளவு இரக்கமற்ற பொறுமையற்ற, ஆதரவில்லாது சதா குறைகூறிச் சினந்து முரட்டுத்தனமாய் ஏமாற்றுபவராக இருக்கலாம் என்பதை இன்றுவரை நீ உணராது இருந்திருக்கலாம்.

உன்னை நீ எவ்வாறு பார்க்கிறாய், மதிக்கிறாய், நடத்துகிறாய் என்பதை எச்சரிக்கையுடன் பார்த்துக்கொள். இந்தப் புரிந்துணர்வு தான் மாற்றத்தின் முதற்படி என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள். மாற்றமின்றி வளர்ச்சி இல்லை அல்லவா? என்னையே நான் எப்படிப் பார்க்கிறேன், மதிக்கிறேன், நடத்துகிறேன் என்பதைப் பற்றிய கூடிய புரிந்துணர்வை வளர்ப்பதில் இன்றுமுதல் நான் ஈடுபடுகிறேன்.

## ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் (51)

மேலதிக தகவல்களிற்கு அழையுங்கள் 905-624-9617



**லலிதா புரூடி**


## யோகா சோதிடம்



- கிரகப் பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

416-299-8361

*The Mortgage Alliance company of Canada*





**வீடு வாங்குவது நீங்கள்**
**பணம் ஒழுங்கு செய்வது நான்**

உங்கள் இல்லத்தை 5% முற்பணத்துடன் கொள்வனவு செய்வதற்கு வங்கி வட்டி வீதத்தைவிட குறைவாக வீடு மற்றும் வியாபார 1ஆவது, 2ஆவது, 3ஆவது அடமான கடன் பெற நாடுங்கள் - காந்தன்

Tel.: 416.291.3997
Cell: 416.895.4283

குறைந்தவட்டி நிறைந்த பலன்

## கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

- வீடு வாங்க விற்க மற்றும் இலவச ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள
- முதல் முறையாக வீடு வாங்குபவர்களிற்கான சலுகைகளை அறிய
- குறைந்த வட்டி வீதத்தில் Mortgage செய்து கொள்ள

அழையுங்கள் **நந்தா**





COLDWELL BANKER
Coldwell Banker Coburn Realty

**Nantha Aiyadurai**, B.Eng.
Sales Rep.
Office : 613.823.7555
Cell : 613.866.9931
Toll Free : 1 800 472.6512

## SHAWN TRUCK & FORKLIFT DRIVING SCHOOL







**Fork Lift licence $75.00**

**Truck licence $899.00**

**In Classes**
**365 (Learning Permit)**
**Dangerous Goods**
**Border Crossing**
**Air Brake (Z)**
**Log book**

- A-Z & D-Z up grade • One on One Training
- Job Placement Right Away!
- உடனடி வேலை வாய்ப்புக்கள்
- வாரத்தில் ஏழு நாட்களும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் பயிற்சிகள் வழங்கப்படும்.

**Air brake $175.00**

Excellent Quality - Low Cost Training

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:
Pl. Call: Raja / Shan
416.412.7618/416.829.0603
40 NUGGET AVE., #8, Scarborough East (McCowan & Sheppard)

# பார்ப்பனச் சிறுவனின் கடைவாயில் பால்வடியக் கண்டு நேர்த்தியான பதில் கூறிய ஞானக்குழந்தை

மூன்றெழுத்துக்களை முழுமையாக உச்சரிக்க முடியாத மூன்று வயதிலேயே முழுமுதற் கடவுள் மீது பதிகம் பாடியவர் சிவம் பெருக்கும் பிள்ளையாரான திருஞானசம்பந்தர். ஞானம் கைவரப்பெற்றதனால் ஞானசம்பந்தரான ஆளுடைய பிள்ளையார் நாளும் பொழுதும் இறைவனை ஏத்திவழிபட்டமையால் தந்தையா ரின் அச்சுறுத்தலில் இருந்து மீளுதற்கு தம்மை ஆளும் அம்மை அப்பன் மீது பதிகம் பாடி மாது ஒரு பங்கினனே அதற்கு ஏதுவானவர் என்று அவரை சாட்சியாக தோன்றச் செய்தவர். இதுதான் அத்தேவாரம்.

*நா. க. சிவராமலிங்கம்*

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடி
காடுடைய சுடலை பொடி பூசி என்னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனை நாட்பணிந்தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமா புரம் மேவிய பெம்மானிவன்றே.

இத்தேவாரம் தமிழ்மறையின் முதலாவது பாட்டு "தோடு" என்ற முதற் சொல்லிலே "ஓம்" என்ற பிரணவ மந்திரம் ஒலிப்பதை உணரலாம். இப்பிரணவநாதம் தகராகாசம் எனப்படும். அது அறிவு வெளியிற் தோன்றும் சுத்தநாதம். ஆதலில் 'த' கர ஒற்றுடன் 'ஓ' காரத்தைக் கூட்டி தோ என்று உரைக்கப்பட்டது. பிரணவ முதலெழுத்தாகிய இந்த ஓ காரமானது பன்னிரண்டாவது திருமுறையாகிய பெரிய புராணத்தில் ஈற்றுச் செய்யுள் ஈற்றடியின் ஈற்று மொழியின் ஈற்றுறெழுத்தாகிய மகர ஒற்றோடு புணர்ந்து "ஓம்" என்று முடிந்து நிற்கின்றது. இதனால் தமிழ் மறைகள் எல்லாம் பிரணவமாகிய ஐந்தெழுத்து மந்திரத்திலே தோன்றி அடங்கி நிற்கும் தன்மை உணர்த்தப்பட்டது. மேலும் இத் தேவாரம் இறைவனின் ஐந்தொழில்களை உணர்த்துவதை யும் அறியலாம்.



ஊழிக்காலத்து அறக்கடவுள் இறைவனைத் தொழுது பிறப்பு இறப்பு இல்லாது என்றும் நிலைத்து நிலவும் தன்மையை வேண்டிய பொழுது இறைவன் அக்கடவுளை வெள்விடையாக்கி அதன்மேல் ஊர்ந்தருளுகின்றார். இதுவே விடையேறிய நிகழ்வு. இது சிவபெருமானது படைத்தல் தொழிலை உணர்த்துகின்றது எனலாம்.

தக்கனால் அடைந்த சாபத்திற்கு ஆற்றாத திங்கள் இறைவனைச் சரண்புகுந்து தனது துன்பத்தைத்துடைத்தருளும் படி வேண்டியது. இறைவன் திங்களின் துன்பம் போக்கி அதனை தனது திருமுடியில் தரித்துக் கொண்டார். துன்பத்தில் காத்தல் தன்மையை வெளிக்காட்டுவதால் இது இறைவனது காத்தல் தொழிலைக் குறிப்பதாகும்.

மகா சங்கார காலத்தில் நிவர்த்தி, கலை முதலிய ஐந்து கலைகளினாலும் அடங்கி உள்ள எல்லாப் புவனங்களையும் அழித்து நடனம் செய்யும் இடமே காடுடைய சுடலை எனப்பட்டது. அவ்விடத்துக் கிடந்த சாம்பரே பொடி எனப்பட்டது. இந்தப் பொடிதான் தன்னைத் தொழுவார் வினைவளம் நீறு எழ இறைவன் தனது திருமேனியில் அணியும் திருநீறாகும். பிணிக்கும் மலத்தை நீறாக்கும் தன்மை உடையது இது. சுடலைக்காடுடைய பொடி அழித்தல் தொழிலைக் குறிப்பதாகும்.

உள்ளம் என்பது மனம். அது சிந்தை எனவும் கூறப்படுகின்றது. உயிர்கள் தன்னை அடைந்து பேரின்பம் நுகரும் பொருட்டுப் பக்குவப்படுத்த வேண்டி திரோதான மலத்தின் வழிநின்று மறைத்து இறைவன் அவைகள் வேண்டிய போகங்களை ஊட்டி உண்பிக்கின்றான். உயிர்களது இந்தக் கட்டுநிலை காலத்தில் இறைவன் உயிர்களுடைய உள்ளத்தில் அவைகள் அறியாதவாறு நிறைந்து கலந் திருப்பதால் 'கள்வன்' என்று கூறப் படுகின்றான். "நினைத்தவர்கள் நெஞ்சுளாய் வஞ்சகக் கள்வர்" என்று அப்பர் வாக்கு. எனவே என் உள்ளம் கவர் கள்வன்" என்பது மறைத்தல் தொழிலைக் குறிப்பதாகும்.



முடிவில் அருள்செய்த என்பது இறைவனது அருளைக் குறிப்பதாகும். அருள் செய்த பெம்மான் என்பது இறைவன் உயிர்களுக்கு அருள் பாலித்தலைக் குறித்து நிற்பதாகும். விடையேறி - மதிசூடி - சுடலைப்பொடி பூசி- உள்ளம் கவர் கள்வன் - அருள் செய்த பெம்மான் என்பன முறையே இறைவனின் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களையும் குறிப்பதா கும். இதனை "ஆக்கி, எவையும் அழித்து ஆசுடனடங்கப் போக்கும் அவன் போகாப் புகல்" என திருவருட் பயன் செப்புகின்றது.

இறைவன் அம்மை, அப்பன், மாதொருபங்கினன், அர்த்தநாரீசுவரன் - அதாவது பெண் அரைவாசி ஆண் அரைவாசி என்பதனை 'தோடுடைய செவியன்' என்ற சொற்றொடர் விளக்குகின்றது. பெருங்கருணைத் தடங்கலான உமாதேவியரே உயிர்கள் கூறும் குறைகளைக் கேட்டு அவைக-ளைப் பிறவித் துன்பத்தினின்றும் நீக்கிச் சிவத்தோடு சேர்த்து பேரின்பம் அடையச் செய்பவர் என்பதால் இத்தேவாரம் சிவன் உமைத் திருக்கோலத்தைச் சித்தரிக்கின்றது எனலாம்.




# கண்கள் மட்டும் போதுமா

நீண்ட நாட்களாகவே சில சினிமா நூல்களை அறிமகப்படுத்தவேண்டும் என்ற நோக்கம் இருந்தது. அண்மையில் "சொல்லப்படாத சினிமா" என்ற நூலைப் பார்த்த பொழுது இக்குறிப்பை எழுத ஆர்வம் ஏற்பட்டது. நல்ல திரைப்படங்கள் மாத்திரமல்ல, நல்ல நூல்களும் ரசனையை வளர்க்கும், தேடலை அதிகப்படுத்தும்.

### சொல்லப்படாத சினிமா - ப. திருநாவுக்கரசு

இப்புத்தகம் இலண்டன் "விம்பம்" அமைப்பினரின் நிதியுதவியுடன் "நிழல்" சஞ்சிகை ஆசிரியர் ப. திருநாவுக்கரசால் தொகுக்கப்பட்டுள்ளது. நிழல் மற்றும் சஞ்சிகைகளில் வெளிவந்த கட்டுரைகளின் தொகுப்பு இது. ஆவணப்படங்கள், குறும்படங்கள் இன்று அதிகமாக தயாரிக்கப்படுகின்றன. இந்நூலில் ஆவணப்படங்கள் அதன் வரலாறு அதன் முன்னோடிகள் என விரிவான கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. தமிழக, புலம்பெயர் ஆவணப்படம் மற்றும் குறும்பட இயக்குனர்களது பெயர்களும் படங்களும் இடம் பெற்றுள்ளன. இதை குறும்பட, ஆவணப்படங்களது வரலாற்று நூல் அல்லது தகவல் நூல் எனக் குறிப்பிடலாம்.

இதில் கனடாவில் ரொறொன்ரோவில் முதல் மூன்று தமிழ் சர்வதேச திரைப்பட விழாக்களிலும் காட்டப்பட்ட பல குறும்படங்களது விவரங்கள் உள்ளன. கனடாவில் சுமதி ரூபன், K.S பாலச்சந்திரன் போன்ற படைப்பாளிகள் பற்றிய கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. மூன்றாவது தமிழ் சர்வதேச திரைப்பட விழா பற்றிய ரதனின் கட்டுரையும் இடம் பெற்றுள்ளது. நல்லதொரு முயற்சி. ஆனாலும் கனடாவில் இடம் பெற்ற வேறு விழாக்களில் காட்டப்பட்ட பல படங்களது விவரங்கள் இதில் இடம் பெறவில்லை. இவ்வாறான ஆவணப்படுத்தும் முயற்சி நடை பெறும் பொழுது தகவல்களை சம்பந்தப்பட்டோர் / தயாரிப்பாளர்கள் அனுப்ப வேண்டும் இல்லையேல் சிலசமயம் அவரது பெயர்கள் இடம் பெறமால் போகும். இத்தவறுக்கு காரணகர்த்தாக்கள் இரு பாலாருமே.

இப்புத்தகத்தை நிழல், 31/49 இராணி அண்ணாநகர், கே.கே. நகர், சென்னை 78 என்ற முகவரியிலும் ரொறொன்ரோவில் உள்ள முருகன் புத்தகசாலை - 416-285-9118 யிலும் பெற்றுக்கொள்ளலாம்.

### 2. உலக சினிமா - எஸ். இராமகிருஷ்ணன்

இராமகிருஷ்ணனுக்கு பல திறமைகள் உண்டு. இவர் ஒரு சிறந்த சிறுகதை எழுத்தாளர் மற்றும் உப பாண்டவம், நெடுங்குருதி போன்ற நாவல்களால் முற்போக்குவாதிகளது கவனம் பெற்றவர். இவர் ஒரு கட்டுரையாளர். ரஜினியின் பட மொன்றிற்கு வசனகர்த்தா.



கனவுப்பட்டறையின் வெளியீடாக உலக சினிமா என்ற நூலை எழுதியுள்ளார். இதில் சினிமா வரலாறு, உலகின் சிறந்த நூறு திரைப்படங்கள், பல திரைப்பட இயக்குனர்களது பேட்டிகள், இந்திய சினிமா வரலாறு, ஏற்கனவே "சலனம்" சினிமா இதழ், நிழல் போன்ற சஞ்சிகைகளில் வெளிவந்த வெ. சிறிராம், சிவக்குமார், தி. சு. சதாசிவம் சொர்ணவேல் இ. சத்தியப்பன், ரமேஷ், எஸ். அல்பேட், திருநாவுக்கரசு ஆகியோரது கட்டுரைகள் போன்றன இடம்பெற்றுள்ளன. சிறந்து நூறு திரைப்படங்களில் பல தரமான படங்களது பெயர்கள் விடுபட்டுள்ளன. இது இராமகிருணனின் பார்வையிலான நூறு படங்கள். சினிமாவை தேடலாக நல்ல சினிமா வளருவதற்கான சிறப்பான முயற்சி. இந்நூலை முருகன் புத்தகசாலையில் பெற்றுக் கொள்ளலாம்.

3. சித்திரம் பேசுதடி - தொகுப்பாசிரியர் சு. தியோடர் பாஸ்கரன்.

இவர் நீண்ட காலமாக சினிமா, சுற்றுப்புறச் சூழல், அகழ்வராய்ச்சி என பல தரமான கட்டுரைகளை எழுதி வருகின்றார். 1938 இலிருந்து 2000 ஆண்டுவரை வெளிவந்த கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல் ஆகும். இதில் வெகு ஆழமான பல கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

"பேசும்படவிழா" என்ற கட்டுரையில் நிமாய் கோஷ் "வாழ்வையும் அதன் உண்மைகளையும் புறக்கணித்து எந்தக்காலத்திலும் கலை பிறந்தது கிடையாது. "பொழுது போக்குக்காக மட்டுமே சினிமாப்படம்" என்று படாதிபதிகள் சொல்லும் போது இந்த பேருண்மையை மறுக்கிறார்கள். இவர்கள் பட உலகை ஒரு பயங்கரத் தொழிற்சாலையாக மாற்றி விட்டார்கள்" என்கிறார். அதேபோல் எம். சிவக்குமார் "சினிமா பார்க்க திறந்த கண்கள் மட்டும் போதுமா" என கேள்வி கேட்கிறார். 'காலச்சுவடு' வெளியீடான இந்நூல் இதுவரை வந்த சினிமா பற்றிய நூல்களில் குறிப்பிடத்தக்கது ஒன்றாகும். இதனை முருகன் புத்தகசாலையில் பெற்றுக் கொள்ளலாம்.

4. தமிழ் சினிமாவின் பரிமாணங்கள் - விட்டல் ராவ்
ஒசூரில் பிறந்த இவர் ஓர் ஓவியரும் கூட. இவருக்கு பல திறமைகள் உண்டு. நாவலாசிரியர், ஓவியர், சிறுகதையாசிரியர். "சில உலகத் திரைப்படங்களும் கலைஞர்களும்" என்ற நூலை ஏற்கனவே எழுதியுள்ளார்.

## வானரன்

நிழல் சஞ்சிகையில் வெளிவந்த இவரது கட்டுரைகளை "நிழல" தொகுப்பாக வெளியிட்டுள்ளது. தமிழ்ச் சினிமாவின் பல பரிமாணங்களை வெளிக்கொணர்ந்துள்ளார். சமூகப்படங்கள், வீர, தீர சாகசப் படங்கள், துப்பறியும் தமிழ்ப்படங்கள், பக்திப் படங்கள், நகைச்சுவை, இசை, ஒளிப்பதிவு என பல பரிமாணங்கள் இவரின் ஆய்வுக்குட்பட்டுள்ளன.

பதிப்புரையில் திருநாவுக்கரசு குறிப்பிட்டது போல் விட்டல் ராவ் தமது கட்டுரைகளை தம் விருப்பத்தின் அடிப்படையில் எழுதியுள்ளார். தமக்கு பிடித்த, பிடிக்காத படங்களை பற்றி ஓரளவுக்கு அவரது கருத்தை பதிவு செய்துள்ளார்.

துப்பறியும் படங்கள் என்ற கட்டுரையின் முடிவில் ஜே. கிருஷ்ணமூர்த்தியை ஆதாரம் காட்டி "பகவத்கீதை சிறந்த துப்பறியும் நாவல்" என்கிறார். இதுவே இந்நூலில் அவர் வைத்துள்ள சினிமா பரிமாணங்களின் விமர்சனப் பார்வைக்கு உதாரணம்.
இந்நூலையும் முருகன் புத்தகசாலையில் பெற்றுக்கொள்ளலாம்.

### அற்றம்

பெண்களை ஆசிரியர்களாகக் கொண்டு வெளிவந்துள்ள சஞ்சிகை. கஜானி குமார், கௌசலா, தான்யா, பிரதீபா தி. ஆகியோரே ஆசிரியர்கள். பெண்களின் ஆக்கங்களை கொண்டு வெளிவந்துள்ளது. "பெண்ணியத்தை அறைகூவி விற்பதற்கல்ல. எழுத்தில் ஆர்முள்ள பெண்களுக்கு முன்னுரிமையளிக்கவே" என்ற நோக்குடன் வெளிவருகிறது.

சிறப்பான அட்டை. பல்வேறு இனப் பெண்களின் படங்கள். ஒவ்வொரு படமும் சிந்தனையை தூண்டுகிறது. உள்ளே பழங்குடியினர், ஓரினச் சேர்க்கையாளர்கள் மற்றும் ராஜினியின் திரைப்பட விமர்சனம் என இடம் பெற்றுள்ளன. தமிழ் மொழி ஓர் ஆண்களது ஆதிக்க மொழி. பெண் எழுத்தாளர்களது படைப்புக்களும் ஆளுமையும் அதிகப்படுத்துவதன் மூலமே இதனை சுத்திகரிக்கச் செய்யலாம். பெண்களின் சிந்தனை வெளிப்பாட்டுச் சொற்கள் மொழியாக்கம் என்பன இடம் பெற வேண்டும். அவ்வகையில் இச் சஞ்சிகையின் வரவு முக்கியமானது. இதன் தொடர்ச்சி என்பது அவசியம். கனடாவில் முதன்முதலாக இடம் பெற்றுள்ள இம் முயற்சி சிறப்பானது.

சஞ்சிகையில் உள்ள தான்யாவின் கவிதை வரிகள் சில...

"எனக்கு காதலும் காமமும்
காத்திருப்பும் வேண்டாம்"

"வெறி கொண்ட ஆன்மா
இன்பத்தை தூண்டும்
எல்லா உறுப்புக்களையும்
அறுத்தெறிய முனைகிறது"

இச் சஞ்சிகையினை பெறவிரும்புவோர் Attamm@gmail.com என்ற இணைய முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்ச்சி 24ம் பக்கம்



# மனிதத்தின் மீதி

ஆராய்ச்சி மலையின்
அடி முடியைத் தொட்டுச் சென்ற
விபுலானந்த சுவாமிகள்
எழுந்து மறைந்த மண்ணில்
முளைத்து வித்தான உத்தமன்

மூன்று முத்துக்களொடு
மனைவியையும்
முழு உலகையும்
கண்ணீர்க் கடலின்
அடி ஆழத்தில்
மூழ்குவதற்கு
விட்டுச் சென்றவன்

அன்றொரு நாளில் அன்புடனே
அறிமுகம் செய்யப்பட்டான்
எனக்கும் என் துணைவிக்கும்
பேராசிரியர் சிவத்தம்பியின்
தொடர்மாடிக் குடியிருப்பில்

முகத்தில் அறிவு வழிந்தது
கண்ணில் தேடல் இருந்தது
நெற்றியில் ஆழம் நெழிந்தது
நெஞ்சில் அஞ்சாமை தெரிந்தது
மீசையில் பண்பு கனிந்தது
குனிந்த தலையின் சிந்தனையில்
ஏதோ ஒன்றை அடையும்
ஆவல் ததும்பியது

ஆய்வு என்பது இதுவே,
நெஞ்சில் ஆணி அறைந்து
கருத்துக்களைப் புகுத்துவது
இவ்வாறே,
எழுத்தின் நடை அழகு
எண்ணியதைத் தெளிவாக்கும் திறமை
சர்வதேசம் அங்கீகரிக்கும் முழுமை
செய்தொழிலின் ஆளுமை
என்றவாறு
இன்னும் நீட்டிச் செல்லும்
தரம்+ஆக்கி
எழுதும் உலகத்தையே
தரமாக்கிய இளம் ஓவியன்
இந்தத் தராக்கி.!

ஆதவன் தலை முழுகும் நேரத்தில்
பூங்காவின் பலகைக் குந்தில் உட்கார்ந்து
அவனுக்காகக் கண் கலங்கி நிமிர்ந்து
வானத்தை விளித்தபோது
அங்கே ஓர் பறவைக் கூட்டம்
சிரித்து மகிழ்ந்து
விளையாடுவதைக் கண்ணுற்றேன்

அவர்கள் விடுகின்ற
சுவாசக்காற்றைப் பார்த்து
"சுதந்திரம்" எனும் சொற்கூட்டம்
அங்கலாய்த்து
ஏங்கி நிற்பதையும் அறிந்துகொண்டேன்

சூரியனும் அங்கங்கே எரிக்கின்றது
மழையும் சிலவேளைகளில் அழிக்கின்றது
உறைபனியும் உயிர்களைப் பறிக்கின்றது
அவர்களைத் தண்டிப்பது
யார்?

எமது அருமைத் தாய் நாடே
மப்பு மந்தாரம்
முகில் கூட்டங்களை விலக்கி
ஆளுக்காள்
கை நீட்டிக் கரம்பற்றும்
பொற்காலம் எப்போது?

பம்பரத்தில் கயிற்றைச் சுற்றி
சுழற்றிவிடுபவர் யாரோ
சுற்றிக்கொண்டிருக்கும் அச்சாணி
சேற்றையும் வாரி
தன் மேனியில் பூசும்

அரிவாளின் ஒருபக்கக் கூர்
இளநீரை அரிந்து
பசியையும் தாகத்தையும் தணிக்கும்
பேனாவின் இருபக்கக் கூர்
அரசையும் அறிவையும்
சீர்ப்படுத்தச் செதுக்கும்

பேனா பிடித்தவர் புதைகிறார்
இளநீர் வெட்டியவர் எரிகிறார்
ஆனால்
பேனா, அரிவாளின் உழைப்புகள்
எப்போதும் ஓய்வதில்லை

காடு அழுகின்றது
கடல் அழுகின்றது
மலை
இரண்டு துண்டுகளாக
முறிந்து விழுந்து அழுகின்றது
கடைத்தொடர் அழுகின்றது
வீதி அழுகின்றது
அவன் படுத்திருந்த
புல் தரையும் அழுகின்றது

கருத்துச் சுதந்திரத்திற்கு
தண்டனை
மரணம் என்றால்
மனிதத்தின்
மீதி.?

**முத்துராஜா**



# குறிப்பறியமாட்டான்

09ஆம் பக்கத் தொடர்ச்சி

தரப்பட்டிருந்தது. தூரக்கண்ணாடியில் முதலில் இடது கண்ணால் பார்த்தேன் பிறகு வலது கண்ணால் பார்த்தேன். ஒன்றுமே தெரியவில்லை. மறுபடியும் கேள்வித் தாளைப் படித்தேன். சுவரில் தொங்கிய மணிக்கூட்டைப் பார்த்தேன். மறுபடியும் கண்ணாடிக்குள் கண்ணைவிட்டு தேடினேன். இப்படியே நேரம் கழிந்தது.

பரீட்சை அதிகாரி தென்பட்டார். செருப்பின் அடியில் ஒட்டியிருக்கும் ஏதோ ஒன்றை தேய்ப்பதுபோல ஆறுதலாக நடந்து வந்தார். "இதிலே ஒருத்தன் மரம் மாதிரி நிற்கிறானே, இவன் இங்கே காலூன்றி நின்ற பிறகு இவன் தலைமயிர் அரை இன்ச் வளர்ந்துவிட்டதே. இவனை என்னவென்று விசாரிப்போம்" என்ற கரிசனை கொஞ்சமும் இல்லாமல் என்னை கடந்துபோனார். அவர் இரண்டாவது சுற்று வந்தபோது இன்னும் கிட்ட வந்து என்னுடைய விடைத்தாளை எட்டிப் பார்த்தார். அதிலே ஒரு வரிகூட, ஒரு வசனம்கூட, ஒரு வார்த்தைகூட இல்லாதது கண்டு அவர் மிகவும் திருப்திப்பட்டு திரும்பிப் போனார்.

எங்கள் செயல்முறை பரீட்சைக்கு 45 நிமிடம் அனுமதித்திருந்தார்கள். இரண்டு வருடப் படிப்பும், 12 மணிநேர ரயில் பிரயாணமும், நாலு தோசையும் இந்த 45 நிமிடத்துக்குத்தான். என்னுடைய வியர்வை என் பெனியனை ஈரமாக்கி, சேர்ட்டையும் நனைத்துவிட்டது. என் உடம்பில் இருக்கும் அவ்வளவு தண்ணீரும் என் முதுகுத் தண்டில் சேர்ந்து மெள்ள மெள்ள இறங்குவது எனக்கு தெரிந்தது. முப்பது நிமிடம் ஓடிவிட்டது. மூளையில் ஒரே இருட்டு. தூரக்கண்ணாடியிலும் எப்படியோ அதே இருட்டுத்தான் தெரிந்தது.

அப்பொழுது கடவுள் தோன்றினார். கட்டை கால்சட்டை, மஞ்சள் ஸ்வெட்டர் அணிந்து. அவர் கைகளில் படிந்திருந்த ஊத்தை அப்படியே வேகம் குறையாமல் அவருடைய ஸ்வெட்டரிலும் அப்பிப்போய் இருந்தது. அவர் ஒரு உதவியாளர் அல்ல அதிலும் கீழே - விஞ்ஞானக்கூடத்தில் வேலைபார்க்கும் ஒரு வேலையாள். நான் எளிதாக பார்க்கக்கூடிய ஒரு இடத்தில், ஆனால் சோதனை அதிகாரி பார்க்கமுடியாத ஒரு இடத்தை தேர்வு செய்து அங்கே போய் நின்றார். இரண்டு பக்கமும் முழுசிப் பார்த்துவிட்டு என்னைப் பார்த்தார். அந்தக் கண்களில் பயம் நிறைந்திருந்தது. தன்னுடைய இரண்டு ஆள்காட்டி விரல்களையும் தூக்கி ஒரு சுழட்டு சுழட்டி காட்டினார். பிறகு வந்த மாதிரியே மறைந்துவிட்டார்.

நான் யோசித்தேன். இந்த ஸ்வெட்டர்காரரின் குறிப்பில் ஏதோ ஒரு விசயம் இருக்கிறது. நித்திரையில் இருந்த என்னுடைய மூளை எழும்பியது. தூரக்கண்ணாடியை சுழற்றி எதிர்ப்பக்கத்தை என் முன்னால் கொண்டுவந்து அதற்குள்ளால் பார்த்தேன். தேவலோகம் தெரிந்தது. உலகம் தெரிந்தது. விஞ்ஞானக்கூடம் தெரிந்தது. விசைச்சுருள் தெரிந்தது. இவ்வளவு நேரமும் தவறான கண்ணாடி வழியால் பார்த்திருக் கிறேன் என்பதை என்னால் நம்பமுடியவில்லை.

ஐந்தே நிமிடத்தில் அடுத்தடுத்து எட்டு அளவுகள் எடுத்தேன். அவற்றை வைத்து வரைந்த கிராப் ஒரு ரூல்தடியிலும் பார்க்க நேரானதாக இருந்தது. கோணத்தை அளந்து, அவர்கள் கொடுத்த சமாந்திரத்தை நிரப்பி, கணக்குகளை விரைவாக செய்து முடித்தேன். புவியீர்ப்பு விசையின் மதிப்பு 981 செ.மீட்டர் என்று வந்தது. நம்பமுடிகிறதா? நியூட்டனான நியூட்டனுக்கே இப்படியான ஒரு விடை கிடைத்திருக்குமா என்பது என் சந்தேகம். என் விடைத்தாளை ஒழுங்குபடுத்தி அடுக்கவும் பெல் அடித்தது.

சோதனை முடிந்து நான் வெளியே வந்தபோது சினிமா தியேட்டர் வாசலில் நிற்பதுபோல அடுத்த சோதனைக்கான மாணவ மாணவிகள் வரிசையாக நின்றனர். என்னைக் கண்டதும் மண்டிபோட்டு குனிந்து குனிந்து வணங்கினர். பயில்வான் போன்ற நடராசா நாய்க்குட்டிபோல என் காலடியில் நடந்து வந்தான். பல்கலைக்கழகத்தில் இருந்து அஞ்சுலாம்படி சந்திவரைக்கும் அலரி மலர்கள் தூவி அலங்காரம் செய்யப்பட்டிருந்தது.

